ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

## 81 வது அவதார தின விசேட மலர்

### யூலை - டிசெம்பர் 2006

இலங்கை
ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SAI SHIVOHAM

Sai Nondual five-lettered (panchaakshari) formula

பகவானால் 06.03.1997இல் தனது சுயரூபம்

இதுதானென்று சிருஷ்டித்த படத்தின் பிரசுரம்

நன்றி 'சாயிதிறீ' - திரு. வி. சுப ராவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்
# Sai Markam


| மலர்:13<br>இதழ் :37 | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு எனும் மதம் | யூலை- டிசெம்பர்<br>2006 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கலியுக அவதார் | 01 |
| 2. | சொற்கள் எவ்வாறு மந்திரங்களாகின்றன | 05 |
| 3. | சாதனை செய்ய உகந்த காலம் | 08 |
| 4. | "மனிதன் தெய்வீகமானவன்" | 10 |
| 5. | மனிதன் தெய்வீகமானவன் ஆனால் இன்று? | 16 |
| 6. | பகவானை நோக்கிய பயணம் | 17 |
| 6. | "இளைஞர்களுக்கு ஆத்மீகவாழ்வின் நன்மைகள்" | 19 |
| 8. | தீபாவளி | 21 |
| 9. | விதியை வெல்ல முடியும் | 23 |
| 10. | மலை நாட்டிலிருந்து | 25 |
| 11. | எப்பொழுதும் காக்கும் எம் காவலன் | 26 |
| 12. | பிரித்தானிய மகாராணியார் அந்நாட்டில் இயங்கும் சாயி இளைஞர் பிரிவைக் கௌரவித்துள்ளார். | 27 |
| 13. | ஆன்மீகசாதனைகளை பகவான் ஊக்குவிக்கிறார் | 28 |
| 14. | பஜ கோவிந்தம் | 29 |
| 15. | பிராந்தியச் செய்திகள் | 32 |
| 16. | அதிசய அனுபவம் + அன்பின் வேகம் அளப்பரியது | 35 |



| | | | |
|---|---|---|---|
| இலங்கையில் தனிப்பிரதி | ரூபா 30/- | (சந்தா அனுப்பும் முகவரி: ஆசிரியருக்கு) | |
| வருட சந்தா ( 4 பிரதிகள்) | ரூபா 120/- | காசோலை: | Sathya Sai Seva Org(NZ)<br>A/No. 4023 |
| வெளிநாடு வருட சந்தா | U.S டொலர் 10 | | HNB, Jaffna. |



ஆசிரியர்: வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி
தொ.பே: 222 2832 / 222 5580

இல. 659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

துணை ஆசிரியர்: திரு.S.R.சரவணபவன்
தொலை.பே: 222 5442



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக அவதார்

**பரபிரம்மம்** என்கின்ற மகாசக்தி காலத்திற்குக் காலம் உலகில் வெவ்வேறு இடங்களில் மனித உருவ மெடுத்தும், உன்னத ஆன்மிக மகான்களைத் தோற்றுவித்தும், மக்களின் துயரைத் துடைத்தும் மக்களின் தெய்வீகத் தன்மையை உணரச் செய்துமுள்ளது. காலம், சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு அவதாரங்களின் தன்மைகளும் அமைந்தன. அன்பே மயமான பரபிரம்மம் இவ்வாறு செயற்படுமென்பதை, கிருஷ்ணபகவான் கீதையிலே பின்வரும் சுலோகத்தில் வெளிக்காட்டியுள்ளார் : (4–8)

**"பரித்ரானாய ஸாதூனாம் வினாசாய சதுஷ்க்ருதாம் !**
**தர்மஸம் ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே"!!**

இதன் கருத்து : நல்லாரைக் காப்பதற்கும், கெட்டவரை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன்.

இந் நியதிக்கேற்ப இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்ற வறிய கிராமத்தில் ஈஸ்வரம்மாவுக்கும், பெட்ட வெங்கப்பராஜுவுக்கும் மகனாக, **1926ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை பகவான் அவதரித்தார்.** இவருக்குப் பெற்றோர்கள் சூட்டிய பெயர் சத்தியநாராயண ராஜு. இவரின் பிறப்பைப் பற்றித் தாயார் கூறும் பொழுது; தான் கிணற்றடியில் நிற்கும் பொழுது, ஏதோ நீல நிற உருண்டை வடிவான ஜோதி உருண்டு வந்து தன் வயிற்றில் உள்ளிட்டதும் தான் மூர்ச்சையாகியதென்றும், இதன் பின்னர் தான் கர்ப்பவதியாகினார் என்றும் சொன்னார். அப்போது பகவானும் அதை ஆமோதித்து, **தனது பிறப்பு பிரசவம் அல்ல பிரவேசமென்று தெளிவு படுத்தினார்.**

அவர் பிறக்கும்முன் வீட்டிலுள்ள இசை வாத்தியங்கள் தாமாகவே இசைத்தன. பின்பு பாடசாலையிலும், நண்பர்களுடன் கூடித் திரியும் பொழுதும் பல அற்புதங்களை நிகழ்த்தினர். பள்ளிச் சிறுவனாகிய சத்திய நாராயணன் 23.05.1940 அன்று ஏதோ சித்தபிரமை பிடித்தவர் போல் காணப்பட்டார். தகப்பனார் ஆத்திரமடைந்து நீ யார்? பிசாசா? விசரனா? என்று கேட்டதற்கு "**நான் சாயிபாபா. ஷீரடி சாயி பாபாவின் மறு அவதாரம்**" என்று தனது தெய்வீகத் தன்மையை முதற்தடவையாக வெளிப்படுத்தினார். தனது 14 வது வயதில் 23 .10.1940 அன்று, பள்ளிப் புத்தகங்களைப் போட்டு விட்டு "**பக்தர்கள் எனக்காக காத்திருக்கிறார்கள் எனது தெய்வீகப்பணி ஆரம்பித்து விட்டது. மாயை நீங்கிவிட்டது**" என்று சொல்லி வீட்டை விட்டு வெளியேறினார். அன்று தான் "மானச பஜரேகுரு சரணம்.... " என்ற பஜனைப் பாடலைப் பாடினார். அன்றிலிருந்து பக்தர்கள் அவரை **பகவான் சத்திய சாயி பாபா** என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

விஞ்ஞானம் , தொழில்நுட்பம், மதிநுட்பம், அதிக வளர்ச்சி அடைந்துள்ள இக் காலத்தில் கடவுள் மனித உருவில் நடமாடுகின்றார் என்பதை ஏற்றுக்கொள்வது சிலருக்கு கடினமாயிருக்கும். இந்த உலக அறிவு நமது புத்தியாலும் ஐம்புலன்களாலும் பெறப்பட்டதே ஆகும். கடவுள் அவதாரம் என்பதை விளங்கும் மெஞ்ஞானம், புலன்களுக்கும் புத்திக்கும் அப்பாற்பட்டது. சிறிது ஆழமாக நாம் சிந்தித்தால், எல்லாக் காரியத்திற்கும் காரணம் உண்டு என்பதை உணரலாம். மேலும் எல்லா வற்றிற்கும் ஆதாரமாக ஏதோ ஒன்று உண்டு என்பதையும் உணரலாம். இந்த ஆதாரமான ஆதிகாரணமான மகா சக்தியான ஒன்றையே நாம் பரபிரமன் அல்லது கடவுள் என்கின்றோம். பெரிய புதிர் என்னவென்றால், மகா சக்திக்கு எங்கும் வியாபிக்கும் எல்லா வல்லமையும் கொண்ட சகலதும் தெரிந்த தன்மைகள் உண்டு. மேலும் இச் சக்தி சத் சித் ஆனந்தமாகவும் உள்ளது. இது விஞ்ஞானரீதிக்கு அப்பாற்பட்டது. எங்கே விஞ்ஞானம் விளக்கம் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறுகிறதோ அங்கே ஆன்மீகம் தான் விளக்கம் கொடுக்கும். ஆகவே கடவுளையோ அவரது தன்மைகளையோ நிராகரிக்க எமக்குத் தகுதியில்லை. மெய்ஞானிகளின் கூற்று சத்தியமானது.

கடவுளின் அவதாரம் ஒன்றின் சில சிறப்பான சக்திகளை (Powers) உபநிடதத்திலும், பகவத் கீதையிலும், பகவான் சத்தியசாயி பாபாவின் அருளுரைகளிலும் கூறப்பட்டுள்ளன. அவையாவன :

1. **காம ஆகர்ஷண:** பக்தர்களின் மேன்மையான ஆசைகளை நிறைவேற்றல்.
2. **புத்தி ஆகர்ஷண :** பக்தர்களின் புத்தியைக் கூர்மையடையச் செய்து ஆத்ம விசாரணைக்குத் தூண்டி விடுதல்.
3. **சப்த ஆகர்ஷண :** சொல்லும் சொற்கள் விளக்கங்கள் பக்தர்களின் மனதில் ஆழமாகப் பதிதல்
4. **அகங்கார ஆகர்ஷண :** அடியார்களின் அகங் காரத்தை உன்னத மாற்றத்தின் மூலம் அழித்தல்.
5. **ஸ்பரிச ஆகர்ஷண:** தொடுதலினால் ஏற்படும் உன்னத விளைவுகள், நோய்கள் தீரலாம், பாவங்கள் அற்றுப் போகலாம், ஆன்மீக எழுச்சி உண்டாகலாம்.
6. **ரூப ஆகர்ஷணம் :** தோற்றத்தினால் கவரும் தன்மை அவரில் இருந்து வெளிவரும் கதிர் அலைகள் மிகவும் கவர்ச்சியானவையும் பரந்தளவுமானதாகும்.
7. **ரச ஆகர்ஷண :** சொல்லிலும் அசைவிலும் நிகரில்லாத இனிமை. பக்தர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் தன்மை
8. **சித்த ஆகர்ஷண:** முன்னை பிறப்புக்களின் வாசனைகளை அறிந்து அகற்றும் சக்தி. ஆசையை அகற்றும் சக்தி.
9. **கந்த ஆகர்ஷண** (நறு மண ஆகர்ஷண) : நறுமணத்தில் தூய்மையும் தெய்வீகமும் உண்டு. ஆன்மீக அலைகள் எங்கும் பரவும்தன்மை.
10. **தைரிய ஆகர்ஷண:** விவரிக்க முடியாத துணிவும் தன்னம்பிக்கையும் உண்டு. என்னதுன்பம் அவமானம் வந்தாலும், எந்தக் கஸ்டங்கள் வந்தாலும் , ஏமாற்றங்கள் சவால்கள் மத்தியிலும் பொறுமையை இழக்காமலிருப்பது.
11. **ஸ்மிர்தய ஆகர்ஷண :** விபரிக்க முடியாத ஞாபக சக்தி. முக்காலத்தையும் அறியும் சக்தி. தெய்வீக திஷ்டி.
12. **நாம ஆகர்ஷண:** அவதாரத்தின் நாமத்தை ஜெபிப்பதால், பக்தனுக்கு எவ்வளவோ நன்மைகள் பயக்கும் சக்தி.
13. **பீஜ ஆகர்ஷண :** அறிவு, விழிப்புணர்வு, காலம், இருக்கை ஆகியவற்றின் மூல வித்துக்களை ஆளும் சக்தி.
14. **ஆத்மா ஆகர்ஷண :** நம்மை முழுமையாக ஈர்க்கும் சக்தி. ஆன்ம ஈாப்புச் சக்தி.
15. **அமிர்த ஆகர்ஷண :** இறப்பின்மையை வழங்கும் சக்தி. அளவில்லாத அன்பு பொழிதல்.
16. **சர்வ ஆகர்ஷண :** சகல வல்லமைகளையும் உடையவன். சர்வவியாபி, பூரண அறிவு, சர்வ வல்லமை.

பகவான் தன்னில் மேற்கூறிய சகல சக்திகளும் அடங்கியுள்ளன என்று கூறியுள்ளார். என்னிடம் வந்து என்னை அறிந்து இன்பத்தை அனுபவியுங்கள் என்று அழைக்கிறார். பகவானின் செய்கைகளை முழுமையாக விளங்க முடியாது. எத்தனை பிறப்புகள் எடுத்து ஆயிரம் ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தாலும் தனது முழுமையான தன்மையை விளங்க முடியாது என்று கூறியுள்ளார். சுவாமி தெய்வீகமானவர் சாதாரண புலன்களுக்கும், புத்திக்கும் அப்பாற் பட்டவரென்று, விஞ்ஞான மேதைகளும், வேத பண்டிதர்களும், சகல மதத்தவர்களும், பாமர மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

சாயி அவதாரம் நிகழப் போவதை பல நூல்களும் தீர்க்கதரிசிகளும் கூறியுள்ளார்கள். சாயி அவதாரம் மூன்று அவதாரங்களைக் கொண்டது. முதலாவது **சிவ அவதாரமாகிய ஷீரடி சாயி அவதாரம்** (1835 – 1918) இந்தியாவிலுள்ள மகராஷ்டிக மாநிலத்தில் நிகழ்ந்தது. இரண்டாவது **சிவசக்தி அவதாரமாகிய சத்திய சாயி பாபா** ஆந்திரமாநிலத்தில் நிகழ்ந்துள்ளது. மூன்றாவது **சக்தி அவதாரமாகிய பிரேமசாயி** கன்னடமாநிலத்தில் நிகழும் என பகவான் சத்தியசாயி பாபா கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் ஏன் மனித ரூபத்தில் வந்து மனிதனை மீட்கவேண்டுமா? என்று சிலர் கேட்கலாம். இதற்கு பகவானின் விளக்கம்; மனிதவுருவில் வந்தால்தானே மனிதர் என்னுடன் பேசிப்பழகலாம். அப்போதுதான் என் போதனைகளைக் கேட்டு விளங்கிக் கடைப்பிடிப்பார்கள். சங்கு சக்கரத்துடன் வந்தால் கண்ணாடிப் பெட்டியில் காட்சிப் பொருளாக பூட்டி வைத்துவிடுவார்கள்.

எல்லாம் வல்ல கடவுள் ஏன் தனது சங்கல்ப் பத்தினால் உலகைத் திருத்த முடியாது? என்ற கேள்வியும் எழலாம். பகவானின் விளக்கம்; அவ்வாறு செய்ய முடியும் என்றாலும், அதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. மனிதன் மிகவிரைவில் பழைய நிலைக்கு திரும்பி விடுவான். மனிதனும் தெய்வீகமானவன். அத் தெய்வத்தை அவமானப்படுத்தக்கூடாது. ஆகவே அவனே முயற்சி எடுத்து உன்னத நிலையை அடைந்தால் அது நீடித்து நிற்கும்.

இன்னுமொரு கேள்வி எழலாம். எவ்வளவோ ஆன்மீக மகான்கள், மத ஸ்தாபகர்கள் தோன்றியும் உலகம் திருந்த வில்லையே ஏன்? பகவான் கொடுத்த விளக்கம்; தனி மனிதனால் உலகைத் திருத்த முடியாது. ஆனால் ஒவ்வொரு மனிதனும் நினைத்தால் உன்னத நிலையை அடையலாம். தனிமனிதர்களின் கூட்டே குடும்பம், சமுதாயம், இனம், தேசம், உலகம் என்று பெருகுகிறது. ஓரளவு மனிதர்கள் உன்னதமாற்றம் அடைந்தால் உலகம் தானாகவே உன்னதம் அடைந்து விடும். பகவான் தனி மனித மாற்றத்திற்கு வழி வகுத்துள்ளார். பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்த நிறுவனம் ஸ்தாபித்துள்ளார். அத்துடன் மனித மேம்பாட்டு கல்வித் திட்டத்தையும் அமுல் செய்துள்ளார்.

இந்த அவதாரத்தின் பிரதான நோக்கு மனிதனிலுள்ள தெய்வீகத்தை வெளிக்கொணரச் செய்வதே ஆகும். அதாவது மனிதனின் சிந்தனை, சொல், செயலில் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய அடிப்படை மனித மேம்பாடுகள் பரிணமிக்க வேண்டும். இத்துடன் மற்றைய நோக்கங்களாவன; சனாதன தர்மத்தை நிலைநாட்டல், வேதத்தின் மகிமையை மலரச்செய்தல், மத ஒற்றுமையை ஏற்படுத்தல் ஆகும்.

பகவானிடம் இருந்து எமக்கு கிடைத்த ஆசிகள் ஐந்தாகும். அவையாவன: நாமம், ரூபம், போதனை, வாழ்வுச் செய்தி, சத்தியசாயி சேவா நிறுவனம் என்பனவாகும். இவற்றைப் பற்றி முன்னைய சாயி மார்க்க வெளியீடுகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பகவானுக்கு எள்ளளவேனும் நான் என்ற அகங்காரமோ அல்லது தேகாபிமானமோ இல்லை. இதனால்தான் பகவான் விளம்பரமோ பகட்டையோ அல்லது அற்புதங்களைப் பகீரங்கமாகச் செய்வதையோ விரும்புவதில்லை. சுவாமியின் நிறுவனமான சத்திய சாயி நிறுவனம் உலகிலுள்ள சகல நாடுகளிலும் நிறுவப் பட்டுள்ளது. இதன் மூலம் சுவாமியின் ஆன்மீக வழிபாடுகள், மனித மேம்பாட்டுக் கல்வித்திட்டங்கள், பாரிய சேவைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களுக்கு கல்வி, ஆரோக்கியம், குடிநீர் இலவசமாகக் கொடுப்பது அரசாங்கம், அரசியல் சமூக ஆன்மீகத் தலைவர்களின் தர்மீகக் கடமை என்று வலியுறுத்தியுள்ளார்.

முன்னோர்கள் கடவுளின் தரிசனம் கிடைப் பதற்கு எவ்வளவோ காலம் தவம் செய்து பெற்றுள் ளார்கள். நாமோ எவ்வளவு பாக்கியசாலிகள். கடவுள் மனித அவதாரம் எடுத்து நடமாடும் காலத்தில் வாழ்கின்றோம். புட்டபர்த்திக்குச் சென்று மனித உருவத்தில் நடமாடும் தெய்வத்தின் தரிசனத்தை ஆசைதீரப் பெறலாம். அவரின் தரிசனமே எமது தீவினைச் சுமையை அகற்றிவிடும்.

பிறந்த தினத்தன்று (23ஆம் திகதி நவம்பர் மாதம்) புட்டபர்த்தியில் உலகமெங்கிருந்தும் பக்தர்கள் இலட்சக்கணக்கில் கூடுவார்கள். அன்று தரிசனம் பெரிய விளையாட்டு மைதானத்தில் (Hill View Stadium) விமரிசையாக நடைபெறும். பல நிகழ்ச்சிகள் நடைபெறும். இறுதியில் சுவாமியின் அருளுரை நிகழும். அருளுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் முடிவில் எல்லோரையும் ஆசிர்வாதிப்பார். பின் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்படும். உணவும் இலவசமாக வழங்கப்படும். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தொண்டு செய்வார்கள். சுவாமியின் தரிசனத்திற்காகவும் அவரின் வாயாலே வாழ்த்தைப் பெறுவதற்காகவும் புட்டபர்த்தி செல்வது மிகவும் புனித யாத்திரையாகும்.

பிறந்த தின அருளுரையின் முடிவில், "ஆனந்த சொரூபியாண எனக்கு எந்நேரமுமே ஆனந்தம். ஆகவே Very Happy Birthday என்ற பிறந்த தின வாழ்த்து எனக்கு அர்த்தமற்றது. **என்னை எப்போது உங்கள் இதயத்தில் வீற்றிருக்கச் செய்கிறீர் களோ, அன்றே உங்களில் நான் பிறந்த திருநாள். இந் நாளைக் கொண்டாடுவதில் அர்த்தமுண்டு"** என்று கூறுவார்.

ஆகவே நாம் எல்லோரும் கடவுளை நினைந்து, எம் இதயத்தில் இமைப்பொழுதும் மறவாது தியானிப்போமாக. பகவானின் ஆசியும் அருளும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திப் போமாக.

"ஜெய் சாயி ராம்"

ஆசிரியர்.

## நாலு நிலைகளில் நாம் செயற்பட வேண்டும்

1. *ஸ்தூல நிலையில்:* நாம் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும்.
2. *அறிவு நிலையில்:* பிறரிடமிருந்து நல்லதைக் கற்பதும், பிறருக்குக் கற்பிப்பதும் அவசியம்.
3. *பண்பு நிலையில்:* நல்லதைக் கடைப்பிடிப்பதும் பிறரைக் கடைப் பிடிக்க வைப்பதும் அவசியம்.
4. *ஆன்ம நிலையில்:* துறவறம்; பக்தர்கள், ஆன்மீக சாதகர் களை, துறவிகளை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# சொற்கள் எவ்வாறு மந்திரங்களாகின்றன

எழுத்துக்கள் சேர்ந்து பதங்கள் அல்லது சொற்களாகவும், சொற்கள் சேர்ந்து சொற்றொடர்களாகவும், சொற்றொடர்கள் சேர்ந்து வாக்கியம், வாக்கியம் பல சேர்ந்ததே மொழியாகும். சகல சொற்களுக்கும் வலிமை அல்லது பலம் உண்டு என்பதை எல்லோரும் அறிவோம். சொல்லின் விளைவு, சொல்பவரிலும், சொல்லும் விதத்திலும், சொல்லும் தொனியிலும், சொல்லப்படும் சந்தர்ப்பம் சூழலிலும், கேட்பவரின் மனப்பாங்கிலும், மனக்கவனத்திலும், உணர்விலும் தங்கியுள்ளது. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்கள்:

ஓம் ஸ்ரீ சாயிராம்! ஓம் நமச்சிவாய! புத்தம் சரணம் கச்சாமி! இயேசுவே என் கர்த்தர்! அல்லா மலிக்!

- வெறும் சொற்றொடர்களா?
- அல்லது வலிமை கொண்ட மந்திரங்களா?
- இவற்றைத் தொடர்ந்து உச்சரிப்பதனால் விளையும் பயனென்ன?

என்பதை பற்றிச் சிறிது சிந்திப்போம்.

**சொற்கள் வழிகாட்டிகளேயல்லாமல் செல்லும் இடமல்ல என்பதை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

தொழில்நுட்பம், மதிநுட்பம் மேலோங்கிய இக்காலத்தில் அனைவரையும் பீடித்திருக்கும் நோய் **மன இறுக்கம்** (Mental stress) **அல்லது மனப் பதட்டம்** (Mental agitation). வாழ்க்கையில் சௌகரியங்கள் கூடக் கூட இந் நோயும் வலுவடைகின்றது. இது ஓர் பெரிய புதிராகவிருக்கின்றது. இன்றைய கல்வி முறையும் மன இறுக்கத்திற்குள் தள்ளி விடுகின்றது. **கல்வி அவசியம் என்றாலும், நடைமுறையிலிருக்கும் கல்வியில் ஏதோ குறையுள்ளது.** இக் குறைபாட்டை இன்று நேற்று அல்ல, வள்ளுவப் பெருமான் காலந்தொட்டு உணர்ந்துள்ளார்கள், இதைப் பற்றிச் சிந்தித்தார்கள், மனம் புழுங்கினார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவப் பெருமான்

"கற்றதனால் ஆய பயன் என்...." (தி.2)

"ஓதியுணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும்
தானடங்காப் பேதையிற் பேதையாரில்" (தி.834)

என்றும்,

ஆறாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசு நாயனாரும்;

"வேதம் ஓதி என்?
வேள்கில் செய்தும் என்?
நீதி நூல் பல நித்தம் பயிற்றில் என்?" என்றும்,

எட்டாம் நூற்றாண்டில் மாணிக்கவாசக நாயனாரும்;

"கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்" (திருவாசகம் 556)

என்றும், கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதியார்

"பல கற்றும், பல கேட்டும் முத்துமாரியம்மா,
பயனொன்று மில்லையடி முத்துமாரியம்மா,
தோல் வெளுக்க சாம்பல் உண்டு முத்துமாரியம்மா,
மணி வெளுக்க சாணையுண்டு முத்துமாரியம்மா
மனம் வெளுக்க வழியில்லையே முத்துமாரியம்மா"

என்றும், வேதனையடைந்தார்கள். **இன்றைய கல்வி முறை, அறிவுத்திறன், செயற்திறனைக் கூட்டி புறவளர்ச்சியைத் தந்துள்ளதேயொழிய அக வளர்ச்சியை முற்று முழுதாகப் புறக்கணித்துள்ளது.** இதனால் ஆன்மிகம் குன்றியது. மனித மேம்பாடுகள் அற்றுப் போய் பண்பாடு அழிந்து கொண்டு போகின்றது. நான் எனது என்ற தேகாபிமானமும், காமம் குரோதம், மோகம், மதம், மாத்ஸரியம், லோபம் ஆகிய உள் ஆறு எதிரிகளும் தலை விரித்தாடத் தொடங்கிவிட்டன. **இந்த மன அழுக்கு அல்லது மனமாசு தான், மன இறுக்கத்திற்குக் காரணமென மெஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.** இதனால் சமுதாயமும், உலகமும் சீர்கெட்டுப் போயுள்ளன.

நம் முன்னோர் இக்குறையைத் தீர்க்கச் சிந்தித்து செயற்பட்டார்கள். கிரேக்க தத்துவஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களான பிளேட்டோ(Plato), அறிஸ்ரோரில்(Aristotle), சோக்கிறீஸ்(Socrates) **சமுதாயத்தைச் சீராக்கு வதிலே நோக்கம் கொண்டிருந்தார்கள்.** கிரேக்க நாகரீகம் சிறிது காலத்திற்கு மேலோங்கி பின்பு அழிந்து விட்டது. இவ்வழியும் வெற்றியளிக்கவில்லை. சிந்தனை யாளர்களும், மெஞ்ஞானிகளும், சமுதாயத்தின் மூலக் கூறாகிய **தனி மனிதனைத் திருத்தினால் சமுதாயம், உலகம் திருந்துமென்ற நோக்கம் கொண்டார்கள்.** பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவும், தனிமனிதன் தன்னைத் திருத்திக் கொண்டால் சமுதாயம், உலகம் தானாகவே திருந்துமென்று வலியுறுத்தியுள்ளார். பரந்த அளவில், சீக்கிரமாக மனித குலத்தை திருத்த கல்வி முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டுமென்று, பகவான், பாலவிகாஷ், மனித மேம்பாட்டுக் கல்வி என்று முன்பள்ளி தொடக்கம், பட்டப் பின் படிப்பு வரை சீரான கல்வி முறையைச் செயல் முறையில் காட்டியுள்ளார். கல்வி என்ற பதத்திற்குப் பதிலாக **எடுகேயர்** (Educare) என்ற பதத்தையே பாவித்து கல்வி முறைக்கு உன்னத திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

எவ்வாறு மன அழுக்கை நீக்கலாமென்று எங்கள் ரிஷிகள், மெஞ்ஞானிகள் ஆராய்ந்து, ஒலிமூலம் தான் இதை ஏற்படுத்தலாம் என்ற முடிவுக்கு வந்து **ஒலியைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தார்கள்.**

பரபிரம்மம் ஏதோ விருப்பம் கொண்டு தன்னைப் பலவாகப் பரிணமித்தபொழுது முதலில் ஒலியுடன் ஆகாயம் தோன்றியது. இதன் பின் மற்றைய பூதங்களும் பிரகிருத்தியும் உண்டாகின. ஆகவே படைப்பில் ஒலி எங்கும் வியாபித்துள்ளது. எங்கெல்லாம் அசைவுகள் உண்டோ அங்கெல்லாம் ஒலி உண்டாகிறது. அணுவிற் குள்ளேயும், பூமி சுழல்வதிலும், ஒலி உண்டாகின்றது.

ஒவ்வொரு எழுத்திலும் உண்டாகும் ஒலி அதிர்வு, சொல்லாகும் பொழுதும், சொற்றொடராகும் பொழுதும் அதிகரிக்கின்றது. ஒலிகள் அனைத்தையும் எமது செவிப்புலனால் கேட்க முடியாது. விஞ்ஞானிகள் **மிகு அதிர்வு ஒலியை** (Ultra sound) அறிந்து, பல விதத்தில் அதை உபயோகிக்கிறார்கள். மெஞ்ஞானிகள் இதற்கும் மேலான ஒலியை உணர்ந்து, அதற்கு **ஆதி நாதம் அல்லது பிரணவம்** (Primordial Sound) என்று பெயரிட்டார்கள். இது தான் எல்லா ஒலிகளுக்கும் ஆதாரமானது. மிகு அதிர்வு ஒலிக்கு, உடலிலுள்ள உறுப்புக்களில் விளையும் கற்களை உடைக்கலாம், அழுக்குப் படிந்த துணிகளைத் தூய்மையாக்கலாம் என்றால், மனதில் ஏற்படும் மாசையும் அகற்றும் வலிமை ஒலிக்கு உண்டு என்று மெஞ்ஞானிகள் உணர்ந்தார்கள்.

மெஞ்ஞானிகள் ஆழ்ந்த தியான நிலையில் ஒலி அதிர்வு கூடிய எழுத்துக்களையும், பதங்களையும் கண்டுபிடித்தார்கள். இப்படி அவர்களால் கண்டு பிடிக்கப் பட்ட **அதிர்வு கூடிய எழுத்துக்களை பீஜாட் சரங்கள் அல்லது மூல எழுத்துக்கள் என்று பெயரிட்டார்கள்.** உதாரணம்: ஓம், ஐம், க்ரீம், க்லீம், ஸ்ரீம் ஆகிய எழுத்துக்கள். இவற்றிற்குப் பொருளில்லை, ஒலி அதிர்வு கூடியுள்ளது. இவற்றை எம் மதத்தவரும் எவ்வினத்தவரும் உபயோகிக்கலாம். ஒளிக்கதிர்களை, தெரிவு செய்யப்பட்ட சில ஊடகங்களுக்குள் செலுத்தினால் வெளிவரும் ஒளிக்கற்று (Laser) பல்லாயிரம் மைல்களுக்குச் செல்லும் வலிமையைப் பெறுகிறது. **மெஞ்ஞானிகளும் இவ் மூல எழுத்துக்களை சொற்றொடர்களாகக் கூட்டி ஒலி அதிர் வைக் கூட்டினார்கள்.** உதாரணமாக 'சிவனை வணங்குதல்' என்ற சொற்றொடரை "ஓம் நமச்சிவாய" என்று மாற்றியதும் அதன் ஒலி அதிர்வு அதிகரிக்கிறது. **இவ்வாறு ரிஷிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்றொடர் களே மந்திரங்களாகின்றன.** மந்திரம் என்ற சொல்லின் அர்த்தம்; (ம–என்றால் மனனம், திர–என்றால் பாதுகாத்தல்) திரும்பத் திரும்பச் சொல்லும் போது பாதுகாப்பளிக்கிறது என்பதேயாகும். **இம் மந்திரங்களை ஜெபிப்பதன் மூலம் மன அழுக்கை அகற்றலாம்.**

நாம் சாதாரணமாகப் பேசும் மொழி குறை மொழி. ஏனென்றால் ஒன்றைப் பற்றி முழுமையாக இன்னொருவருக்கு விளக்க முடியாது. மெஞ்ஞானிகள் பேசும் மொழி நிறைமொழி. ஆகவே இவர்களை **நிறைமொழி மாந்தர்களென** அழைப்பார்கள். மெஞ்ஞானி களுக்கு குறைமொழியிலிருக்கும் சொற்றொடர்களை நிறைமொழியாக்கும் ஆற்றல் உண்டு. மேலும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் சக்தி முழுவதையும் அந்தச் சொற்றொடர்களில் ஏற்றி "**இவை மந்திரங்களாகக் கடவன**" என்று ஆணையிடுவதன் அல்லது சங்கல்பத்தின் மூலம் மந்திரங்களாக மாற்றுகிறார்கள்.

இம் மந்திரங்களை ஜெபிப்பதனால் அகத் தூய்மையும் புறத்தூய்மையும் ஏற்படுகிறது. இவற்றை அறிந்தோ அறியாமலோ உச்சரித்தால் ஓரளவு பயன் விளையும். ஒரு முகப்பட்ட மனதுடன் ஜெபித்தால் பலன் மேலும் அதிகரிக்கும். பலர் கூடி நாமஸ்மரணை அல்லது நாம சங்கீர்த்தனம் செய்தால் பலன் பன்மடங்கு அதிகரிக்கும்.

நாமஸ்மரணை எம்மைத் தூய்மைப்படுத்திப் பாதுகாக்கின்றது. மனப் பலமும் அதிகரிக்கின்றது. இடைவிடாத நாமஸ் மரணையே இக் காலத்திற்கு மிகவும் உயர்ந்தது.

"ஜெய் சாயி ராம்"

Dr.இ.கணேசமூர்த்தி,
யாழ்ப்பாணம்.

உசாத்துணை நூல்கள்

1. Sadhana, The Inward Path - Prasanthi Nilayam Publication.

2. மந்திரங்கள் என்றால் என்ன? - அ . ச. ஞானசம்பந்தன்.

## ராமபிரமம் என்பவர் இளம் சாதகர்களுக்குக் கொடுத்த அறிவுரை:

" சுவாமியே ! நீங்கள்தான் எம்மைச் சரியான செயல்களை செய்யத் தூண்டவும் என்று ஒவ்வொரு செயலைத் தொடங்குமுன் பிரார்த்திக்கவும். எமது புத்தியில் நம்பினால், 10இல் 9 தடவை பிழையாகப் போகலாம்."

- சத்தியம் சிவம் சுந்தரம் பா. V , பக் 279



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# சாதனை செய்ய உகந்த காலம்

ஆத்ம விடுதலையை நோக்கிச் செல்வதற்கு சாதனை செய்வது அவசியம். மனதை ஒருமுகப் படுத்தி ஒரே பொருளைச் சிந்தித்து நுண் உணர்வுடன் செயற்பட மனதைப் பக்குவப்படுத்துவதற்கு சாதனைகள் அவசியம். சில புறச் சூழ்நிலைகள் அமைந்தால் சாதனை செய்வது தீவிரம் அடையும். இந்தப் புறச் சூழ்நிலைகள் எவை என்பதைப் பார்ப்போம்.

தினசரி குறிப்பிட்ட நேரத்தில் சாதனை செய்து வரவேண்டியது ஒரு சாதகனுடைய நாளாந்த கடமைகளில் ஒன்று. தினசரி சாதனை செய்யும் போது சில நாட்களில் சாதனை சிறப்பாக அமைந்து மனத்திருப்தியை கொடுக்கும். சில நாட்களில் மனம் ஈடுபட மறுத்து வெளியே ஓடிக்கொண்டிருக்கும். அதனை அடிக்கடி இழுத்துவந்து எம்முடன் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

சாதனை சிறப்பாக அமைவதற்கு சில நாட்கள், சில திதிகள் (பௌர்ணமி, அமாவாசை, அட்டமி போன்றவை) சில விசேட தினங்கள் காரணமாக இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமாதிரி அமையும். ஆனால் எல்லோருக்கும் பொதுவாக சாதனை செய்ய உகந்த காலம் ஒன்று உண்டு. அதுதான் மனதில் துக்கம், பயம், கவலை போன்ற உணர்வுகள் இருக்கும் போது எந்த நேரமும் இறைவனின் நாமத்தையோ, அல்லது இறை சிந்தனையிலோ இருப்பது சுகத்தைத் தரும். மனதில் சந்தோஷம், வெற்றி ஆகிய உணர்வுகள் இருக்கும் போது இறைவனை மனமுருகிப் பிரார்த்திக்க வராது. வணங்கினாலும் அது சம்பிரதாய பூர்வமாகவே இருக்கும். ஆனால் துன்பம் தான் எம்மை இறைவனை நோக்கித் தள்ளிச் செல்லும். ஆகவே துக்கம், பயம், கவலை நிறைந்த நேரத்தை இறைவனைப் பிரார்த்திக்கும் நேரமாக மாற்றினோமாயின் மேற்படி பய உணர்வுகளை வெல்வதுடன் இறைவனை நோக்கிய பயணத்தைத் தீவிரப் படுத்தியவர் களாவோம்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது நாட்டில் இன்றைய சூழ்நிலை பயம், கவலை, துக்கம் ஆகியவை நிறைந்ததாக உள்ளது. பத்திரிகைகள் தாராளமாக இந்த உணர்வுகளை நாடெங்கும் பரப் புகின்றன. இன்று இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் இந்த பய உணர்விலிருந்து எப்படித் தப்பலாம்? வெளிநாடுகளுக்கு ஓடிவிடலாமா? வேறு இடங்களுக்கு பாதுகாப்பாக சென்று விடலாமா? என்றெல்லாம் சிந்தித்து வருகின்றனர். ஆகவே இன்றைய சூழ்நிலையில் கடவுள் இருக்கிறார்; அவர் எம்மைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையை ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படுத்த வேண்டும். ஒரு கூட்டாக இருந்து சாதனை செய்வது ஒரு திடமான நம்பிக்கையை ஏற்படுத்தும். இந்த நம்பிக் கையைச் சரியான முறையில் வழிப்படுத்துவதன் மூலம் இறைவனை நோக்கிய பயணத்தைத் தீவிரப்படுத்தலாம்.

மகாபாரதக் கதை முடிந்து கிருஷ்ணர் மீண்டும் வைகுந்தம் செல்லத் தயாராகும் வேளை. தன்னுடன் இணைந்து பாரதக் கதையை வழிநடாத்திய எல்லாக் கதா பாத்திரங்களிடமும் கிருஷ்ணர் விடைபெற்று வருகிறார். குந்திதேவியிடம் வந்து விடைபெற்றுச் செல்லும் போது "உனக்கு வேண்டிய வரத்தைக்கேள்" என்று கேட்ட போது குந்தி தேவி கேட்ட வரங்களில் ஒன்று "**கிருஷ்ணா எனக்கு ஓயாமல் துன்பத்தையே தா**" என்பதும் ஒன்று. இது மிகவும் விசித்திரமான ஒரு வரம். மகாபாரதக் கதையில் ஓயாமல் துன்பத்தையே அனுபவித்த கதாபாத்திரங்களில் முக்கிய மானது குந்தியின் பாத்திரம். அப்படிப்பட்ட குந்திதேவி எனக்கு ஓயாது துன்பத்தையே தா என்று கேட்ட காரணத்தை கிருஷ்ணர் வினாவிய போது அவர் கூறிய பதில்-"**கிருஷ்ணா மனதில் துன்பம் இருக்கும் போது தான் உன்னை ஆழமாக நினைக்க முடியும் ஆகவே துன்பத்தையே தா**" என்று கேட்டு வரம் பெற்றதாக வரலாறு. ஆகவே துன்பம் விடுதலையின் வித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலச் சூழ்நிலை எமக்குத் துன்பத்தையே தாராளமாக தந்துள்ளது. ஆகவே இறைவனை நோக்கிய எமது பயணத்தை தீவிரப்படுத்த இது ஒரு பொற்காலம். ஒவ்வொருவரையும் அவர் இஷ்ட தெய்வத்தை தீவிரமாக பிரார்த்திக்க வைக்கும் வேலையை ஆன்மீக நிறுவனங்கள் தீவிரப்படுத்த வேண்டும். இது பயம் கவலை துக்கத்தைப் போக்குவதுடன் இறை நம்பிக்கையையும் வளர்த்து இரட்டை நன்மையை ஏற்படுத்தும். இந்த சந்தர்பத்தில் சமய குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் ஒன்று எம்மை சாதனை செய்ய வற்புறுத்துகிறது. அதாவது :

"அவ்வினைக் கிவ்வினையா மென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம் தமக்கு ஊனமன்றே!
கைவினை செய்தெம்பிரான் கழல்போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்"

– திருநீலகண்டப்பதிகம் –

மேற்படி தேவாரத்தில் எமது செய்கையைக் கூறி கேவலமாகக் காட்டுகிறார். "அவ்வினைக்கு முற் பிறப்பில் செய்த வினைக்குத் தான் இவ்வினையா மென்று அஃதறிவீர்"; இப்பொழுது நாங்கள் இந்தப் பிறவியில் துன்பத்தை அனுபவிக்கிறோம் என்று சொல்ல உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த துன்பத்தில் இருந்து எப்படி உய்வது என்ற வழியை நாடாமல் இருப்பது உங்களுக்கு அவமானம் அல்லவா? கையால் நல்ல கருமங்களைச் செய்து (சேவை செய்தல் பூக்களால் அர்ச்சனை செய்தல், தொழுதல் என்பன) எம்பெருமானுடைய பாதங்களைத் தொழுங்கள். செய்வினை வந்து எம்மைத் தீண்டப்பெறாது திருநீலகண்டம்" என்று கடைசி வரியில் கூறி அப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் கடைசிச் சொல்லாக "திருநீலகண்டம்" என்று கூறிகிறார். சிவபெருமானைச் சாட்சியாகக் காட்டுகிறார். தேவர்களை ஆலகால விஷம் கலைத்துக் கொண்டு வந்தபோது சிவபெருமான் அதனை எடுத்து தனது தொண்டையில் வைத்து தேவர்களைக் காப்பாற்றினார். ஆகவே சிவபெருமான் தொண்டையில் இருப்பது "பிறரைக் காப்பாற்றுவேன்" என்பதை உறுதியாகத் தெரிவிக்கும் ஒரு சின்னமாகும் (Medal). இதனை அந்தப்பதிகத்தின் ஒவ்வொரு தேவராத்தின் கடைசியிலும் கூறி ஒரு நம்பிக்கையை ஊட்டுகிறார் சம்பந்தப்பெருமான்.

துன்பம் ஒரு கேடா? இல்லவே இல்லை. துன்பம் அகங்காரத்தை அடக்குகிறது. இன்பம் அனேகதுன்பங்களுக்கும் மனிதனை ஆளாக்குகிறது. இன்பம் அறிவை மறைக்கிறது. உண்மையை மறைக்கிறது. துன்பமோ "ஏன் என்று கேட்க வைக்கிறது". ஆகவே துன்பத்தை எதிர்கொள்ள வேண்டும். அது எம்மைப் புனிதப்படுத்த இறைவனால் தரப்பட்ட பரிசு. இக்காலம் சாதனைக்கு உகந்த காலம். இதனால்தான் பலவித சாதனைகளை – (காலை, மாலை, வார இறுதிநாட்கள் சாதனை). சாயி நிலையங்களில் அறிமுகப்படுத்தியுள்ளனர். இவற்றை மனஈடுபாட்டுடன் செய்து இறைவனை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்துவோமாக.

"ஜெய் சாயி ராம்"

S.R.சரவணபவன்
தாவடி.

"யமன் பயம் தருவான்.
இறைவன் அபயம் தருவார்.
துறவும், தொண்டும் தேசத்தின் இலட்சியம்.
துறவு என்பது சுயநலத்தைத் துறப்பதேயாகும்."

– சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம் ஸ்ரீ சாயி ராம்”

# "மனிதன் தெய்வீகமானவன்"

(பாபாவின் கீதைப் பேருரைகள் பாகம் இரண்டில் (பக்கம் 227–240) பகவான் பாபா கூறியுள்ள *"நான்கு கால் ஜீவன்களின் மகாநாடு" என்னும் கதை*)

உண்மையில் மனிதன் தெய்வீகமானவன்; அஞ்சாமையே அவனது இயல்பு. மானவ எனும் சொல் மனிதனிடம் உள்ள இந்த தெய்வீக சாரத்தை சுட்டுவதே; அதனால்தான் அது மனிதனைக் குறிக்கப்பயன்படுத்தப் படுகிறது. இது தொடர்பாக ஒரு கதை இருக்கிறது. ஓரிடத்தில் அதிபயங்கரமான கானகம் ஒன்றிருந்தது; அந்த வனத்தில் ஏராளமான விலங்குகள் வசித்தன. பெரும்பாலான வனங்களில் சிங்கங்கள் இருந்தால் யானைகள் இருக்காது. யானைகள் உலாவிக் கொண்டிருந்தால் சிங்கங்கள் இருக்காது. ஆனால் இந்த வனத்தில் சிங்கங்கள், யானைகள், ஓநாய்கள், நாய்கள் முதலிய எல்லா வகை விலங்குகளும் இருந்தன. ஒரு நாள் நரி ஒன்று தனக்குள்ளாகப் புத்திசாலித்தனமாக நினைக்க ஆரம்பித்தது. "மனித இயல்பு மட்டும் சிறப்பானது, ஈடிணையற்றது என்று மனிதர்கள் தங்களைப் பற்றிப் பெருமை பேசுகிறார்கள். மானிட பிறவி என்று மனிதர்கள் தங்களைப் பற்றிப் பெருமை பேசுகிறார்கள். மானிட பிறவி கிட்டுவது அரிதினும் அரிது என அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் விலங்குகள் பிறப்பது போன்றுதான் மனிதர்களும் பிறக்கிறார்கள். ஜந்து எனும் சொல் தாயின் கருவில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்று; ஆனால் ஜந்து என்பதற்குப் பதிலாக மனிதனுக்கு ஏன் மானவ எனும் பெயர் கொடுக்கப்பட்டது? என்பதுதான் கேள்வி. **மனிதனைவிட நாங்கள் எந்த வகையில் தாழ்ந்தவர்கள்**"?

தனக்குள் குமுறிக் கொண்டிருந்த நரியானது இப்படியாகப் பல வாதங்களையும் பிரதிவாதங்களையும் எழுப்பி, இறுதியில் மனிதனுக்கும் விலங்குக்கும் வேறுபாடில்லை என்று நிரூபிப்பதெனத் தீர்மானித்தது. அன்று முதல் இந்தச் சிக்கல் குறித்து பல வனவிலங்கு களிடம் நரி எடுத்துரைக்க ஆரம்பித்தது; மற்ற மிருகங்கள் இருக்கும் இடத்தை அடைந்து, "இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏன் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மனித வாழ்வைவிட விலங்கு வாழ்வு தாழ்வானதென மக்கள் நினைக்கின்றனர். இந்தத் தவறான நம்பிக்கையை மாற்றி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்". இந்த அடிப்படையில் அது மற்ற விலங்குகளை ஊக்குவித்து அந்தக் கருத்து குறித்து சிந்திக்க வைத்து, வியப்படைய வைத்தது. இந்தத் தவறான நம்பிக்கை எப்படிக் கற்பிக்கப்பட்டது? அதை, மிக்க வலிமையுடன் திகழும் யானை மற்றும் அதிக ஆற்றலும் அஞ்சா நெஞ்சம் படைத்த நமது அரசனான சிங்கம் முதலியவை கூட ஏற்றுக் கொண்டது எப்படி? என்று எடுத்துக் கூறியது. மிகப் பெரிய விலங்குகள் மகாநாடு ஒன்றைக் கூட்டி இந்தக் கருத்துக்களின் மீது கலந்துரையாடல் செய்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சில தீர்மானங்களைக் கொண்டு வருவதென நரி முடிவு செய்தது. அந்தக் கூட்டத்துக்கு **"சதுஸ்பாத மகாசபா"** என நாமகரணம் சூட்டப்பட்டது. **‘நான்கு கால் ஜீவன்களின் மகாநாடு’** என்பது அதன் பொருள். ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் பெரிய திறந்தவெளி அரங்கொன்றில் நடத்தப்படும் அந்தச் சிறப்பு கூட்டத்துக்கு அனைவரும் வந்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் மூன்று கருத்துக்களை முன் வைப்பதென ஒப்புக்கொள்ளப்பட்டது. விலங்குகளைப் போலவே மனிதர்களும் தாயின் கருவிலிருந்து பிறப்பவர்கள் தான்; எனவே மனிதனுக்கும் விலங்கு களுக்கும் வேறுபாடு இருக்கக் வடாது. தாயின் வயிற்றி லிருந்து பிறக்கும் அனைத்து உயிர்களையும் ஜந்து என அழைப்பதே பொருத்தமானது. எனவே ஒன்று மனிதனை ஜந்து என அழைக்க வேண்டும் அல்லது விலங்கை மனிதன் என அழைக்க வேண்டும்; **இரண்டு வேறுபட்ட பட்டங்கள் அல்லது பெயர்கள் இருக்கக் கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டத்தில் அவைகள் வைக்க விரும்பிய முதல் தீர்மானம் இது.** விலங்குகள் அறிவற்றவை எனவும் மனிதன் அறிவுடையவன் எனவும் பாகுபடுத்தப்பட்டி ருக்கிறது; விலங்குகள் இதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பது **இரண்டாவது தீர்மானம்.** எந்த வகையில் விலங்குகளை விட மனிதனுக்கு அதிக விவேகம் இருக்கிறது. குறிப்பாக இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்பியது நரி. "நாம் பெற்றிராத என்ன விவேகத்தை மனிதன் பெற்றிருக்கிறான். மனிதனிடமும் விலங்கிடமும் இருப்பது ஒரே மாதிரியான விவேகம்தான் என்பதை நாம் கண்டிப்பாகத் தீர்மானித்தாக வேண்டும்" என்று அது கேட்டது.

**நரி முன்வைத்த மூன்றாவது கருத்து.** "மனிதனைப் பேசும் விலங்கு என்றும் நம்மை ஊமை என்றும் கருதுகின்றனர். நமக்கு மிகவும் பாதகமாக உள்ள விஷயம் இது; மனிதர்கள் இதைத் தமக்குரிய பெரிய மேன்மையாகக் கருதுகின்றனர். ஆனால் அப்படியே ஊமையாக இருப்பினும் அதனால் நமக்கு இப்போது என்ன நட்டம்? பேசப் பழகியதன் மூலமும் அதில் தேர்ச்சி பெற்றதன் மூலமும் மனிதன் அடைந்துள்ள அதிகப் படியான மகிழ்ச்சி என்ன? எனவே பேசுவது, ஊமையாக இருப்பது இரண்டுமே கிட்டத்தட்ட ஒன்று தான் என்று நாம் முன்மொழிய வேண்டும்".

"நாம் சிந்திக்க வேண்டிய **நான்காவது கருத்து** ஒன்றும் இருக்கிறது. மனிதர்கள் நம்மை முரட்டு குணம் (ரஜோ) உடையவர்கள் என்றும் அவர்களை சாந்த (சாத்வீக) சொரூபிகள் என்றும் கருதுகின்றனர். இதற்கு நாம் யாருமே சம்மதம் தெரிவிக்கக் கூடாது. நம்மிடம் இருக்கும் சாத்விக இயல்பு கூட மனிதனிடம் இல்லை. போற்றக் கூடிய வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும், மனிதர்களை விட மிக உயர்வான நிலையில் இருப்பது நம்முடைய சாத்வீக இயல்பே" என்று கூறியது நரி. கூட்டத்தில் வாதிக்கப்பட வேண்டிய இந்த நான்கு கருத்துக்களையும் அனைத்து விலங்குகளும் ஏற்றுக் கொண்டன. ஆனால் அவர்களது கூட்டத்துக்குத் தலைமை தாங்க யாரை அழைப்பதென தலையைக் குடைந்து கொண்டிருந்தன.

ஏராளமான ரிஷிகளும் மகாத்மாக்களும் கானகத்தில் தவம் செய்து கொண்டிருப்பதை நரி சுட்டிக் காட்டியது. "நமது கூட்டத்துக்குத் தலமை தாங்க மிகச் சிறந்த முனிவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று அது யோசனை கூறியது. அனைத்து விலங்கு களும் அதை ஏற்றுக் கொண்டு, கூட்டத்துக்குத் தலைமை தாங்கக் கூடிய மஹரிஷியைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை நரியிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்தன. குகை ஒன்றுக்குச் சென்ற நரி, அங்கே முனிவர் ஒருவர் தவத்தில் இருப்பதைப் பார்த்தது. மரியாதையுடன் அவரை அணுகி. "ஸ்வாமி! விலங்குகளின் சாம்ராஜ்யத்தில் சதுஸ்பாத மஹாசபா எனும் மிக முக்கியமான கூட்டம் ஒன்றை நடத்துவதெனவும் அதற்கு தாங்கள்தான் தலைமை தாங்க வேண்டுமெனவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று வேண்டியது. ஒவ்வொன்றையும் , வாழும் தெய்வமாகவே கருதும் அந்த ரிஷி, "மிகவும் நல்லது, உங்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினார். எனவே ஒரு பெரிய திறந்தவெளி வயலில் அவற்றின் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இது முக்கியமான கூட்டமாதலால் கானக த்திலுள்ள ஒவ்வொரு மிருகமும் மிகச் சிறியதிலிருந்து மிகப் பெரிய மிருகம் வரை தனது குழந்தைகள், ஏன்? பேரக்குழந்தைகள் கூட வந்தன. அது ஓர் அருமையான கூட்டமாதலால் அனைத்துமே மிகமிக உற்சாகத் துடனும் அளவுகடந்த மகிழ்ச்சியுடனும் இருந்தன. தங்களது தலைவருக்குத் தன்னிகரிலா மரியாதையை அனைத்து மிருகங்களும் பெருமளவில் செலுத்தின. தலைவருக்கு ஓர் உயரமான மேடை அமைக்கப்பட்டது. தலைவர் நாற்காலிக்கு அருகே சிங்கத்துக்கும் ஒரு நாற்காலி போடப்பட்டது. தலைமை தாங்க வந்த மஹரிஷியும் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார்; அடுத்தஆசனத்தில் இருந்த சிங்கத்தைப் பற்றி அவர் சிறிதும் பயப்படவில்லை. வாழும் ஒவ்வொரு உயிரிலும் இறைவன் இருப்பதை உணர்ந்தவர் அந்த மஹரிஷி; ஆதலால் அவரிடம் அஞ்சாமை ஓங்கி உயர்ந்திருந்தது. அனைத்து மிருகங்களும் அதனதன் இடத்தில் அமர்ந்தபின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கிடையே இருக்கும் மஹரிஷியை முறைப்படி வரவேற்க வேண்டிய கட்டம் வந்தது; அந்த மாபெரும் கூட்டத்துக்கு செயலராக இருந்தது நரி. **எனவே நரி தனது வரவேற்புரையை நிகழ்த்த ஆரம்பித்தது**.

"பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! அரசர் ஏறே! மாண்புமிகு அமைச்சர் அவர்களே! மற்றும் சகோதர, சகோதரிகளே! இந்த நாள் இந்தக் கானகத்து வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். இன்று மறக்க முடியாத நாளாகும், விலங்கு சாம்ராஜ்யத்தால் ஒரு போதும் மறக்க முடியாத நாளாகும்; ஏனெனில் நாம் அனைவரும் கூடியுள்ள இந்த மாமன்றத்தில்தான் இன்று நாம் அபாரமான வெற்றி அடைய இருக்கிறோம். நீங்கள் அனைவரும் இங்கு வருகை புரிந்ததன் மூலம் குறிப்பிடத்தக்க தியாகம் செய்துள்ளீர்கள். பரபரப்பான வாழ்க்கையில் உங்கள் அனைவருக்குமுள்ள பல்வேறு அலுவல்களுக்கிடையே நேரம் ஒதுக்கி இங்கு வந்து கலந்து கொண்டுள்ளீர்கள். எனவே முதற்கண் உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைக் கூறிக் கொள்கிறேன்" இப்படிக் கூறிவிட்டு செயலர், நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த நிகழ்ச்சிகளை விளக்கினார். நிகழ்ச்சி நிரல் சமர்ப்பிக்கப்பட்ட பின் சிங்கம் எழுந்து அந்த பிரமாண்டமான கூட்டத்தினரைப் பார்த்து பேசியது.

**சிங்கம் பேசிய விபரம் :-** "என் சகோதரன் சொன்ன அனைத்தையும் நீங்கள் கேட்டீர்கள். உங்களிடம் உள்ள வீரம், தீரம் முதலிய கம்பீரமான இயல்புகள் உண்மையில் மனிதர்களிடம் இல்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதற்குச் சரியான நிரூபணம் நானே. வீர தீரத்தை எடுத்துக் கொண்டால் எனது ஆற்றலுக்கும் வீரத்துக்கும் சமமான ஆற்றல் எந்த மனிதனிடமாவது இருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நான் விலங்குகளின் அரசனாக இருந்த போதும் தவறான, நேர்மையற்ற செயல்களை ஒரு போதும் செய்வதில்லை. காரணமில்லாமல் மிருகங்களை நான் கொல்வதில்லை. நான் பசியுடன் இருக்கும் போது மட்டும் சிறிது உணவு கொள்வேன். பொழுது போக்குக்காக எந்த மிருகத்தையும் நான் கொல்வதில்லை; நான் உணவை ஒரு போதும் வீணாக்குவதில்லை. நமது வீரத்தையும் நமது நடத்தை முறைகளையும் நமது உயர்ந்த ஒழுக்கத்தையும் சிந்தித்துப் பாருங்கள்; இப்படிப்பட்ட சிறந்த இயல்புகளை நாம் மனிதர்களிடம் காண முடியுமா? முடியாது. அந்த இயல்புகள் அவர்களிடம் இல்லவே இல்லை. எனவே நாம் மனிதனைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்? மனிதனை விட நாம் தாழ்ந்தவர்கள் என்று ஏன் நினைக்க வேண்டும்? நமது பெருமையைக் குலைக்கும் இந்த கறையைத் துடைத்தெறிய இன்று உறுதி கொள்வோம்".

அடுத்து சிங்கத்தருகே அமர்ந்திருந்த **யானை எழுந்து பேசியது**. "என் காலில் பாதிகூட இல்லாதவன் மனிதன். வலிமையிலும் கம்பீரத்திலும் என்னுடன் மனிதனை உறுதியாக ஒப்பிடமுடியாது. எனது மதிநுட்பத்தைப் போற்றி ஒரு பழமொழியே இருக்கிறது. மன்னர்கள், சக்கரவர்த்திகள், பிரசித்தி பெற்ற தலைவர்கள் அனைவரும் என்னிடம் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்கள். மாபெரும் ஊர்வலம் நடப்பதாக இருப்பின் அதில் நான் இல்லையேல் அந்த விழாவையே ஒத்திப் போட வேண்டிவரும். நான் இத்தனை பேறுகள் பெற்றவனாகத் திகழ்கையில் மனிதன் என்னைவிட மேன்மையானவன் என எப்படி நீங்கள் நினைக்கிறீர்கள்? எனது அறிவுக் கூர்மையோ அதி அற்புதமானது. எனவே நீங்கள் இந்த இரண்டை மட்டும் அதாவது எனது மதிநுட்பத்தையும் உடலின் வடிவத்தையும் சிந்தித்துப் பார்த்தால் கூட எனக்கு முன்னால் மனிதன் ஒருபோதும் நிற்க முடியாது என்ற முடிவுக்கு நீங்கள் வந்து விடுவீர்கள்".

**அதன்பின் நரி எழுந்து பேசியது**. "நமது சிங்க மஹாராஜா பேசியதையும், சிறந்த மந்திரியான யானை பேசியதையும் இதுவரை கேட்டீர்கள். இப்போது சின்ன விலங்குகளின் பிரதிநிதியாக யாராவது ஒருவரை பேச வரும்படி அழைக்கின்றேன்". **காட்டு நாய் ஒன்றைப் பேசும்படி அனைத்தும் வேண்டின.** அது முதற்கண், தலைவர், அரசர், மந்திரி, செயலர் மற்றும் அங்கு குழுமியிருந்த மாபெரும் கூட்டத்தினர் அனைவர்க்கும் தனது வணக்கத்தைத் தெரிவித்தது. அதன்பின், "நான் உருவத்தில் மிகச் சிறியவனாகவும் பலவீனம் உடையவனாக இருப்பினும் நம்பிக்கை ஊட்டுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நிகராக யாரும் இருக்க முடியாது. என்னை வளர்ப்பவரிடம் அசைக்க முடியாத நம்பிக்கையும், அளவு கடந்த விசுவாசமும் செலுத்துபவன் நான். எனது உயிரே போவதாக இருப்பினும் கூட நம்பிக்கை உடைமையும் நன்றி உடைமையும் ஒரு போதும் என்னைவிட்டுப் பிரியாது. எனது தலைவன் எனக்கு இன்னலும் இடையூறும் தந்தாலும் நான் அவர்களுக்குத் திருப்பித் தொல்லை தருவதில்லை. நாயிடம் இருக்கும் இந்த விசுவாசம் மனிதர்களிடம் இல்லை என்பதை ஒவ்வொருவரும் அறிவர். விசுவாசம் எனும் குணத்தைப் பொறுத்தவரை மனிதனைவிட நான் ஒருபோதும் தாழ்ந்ததில்லை. யார் மிகவும் பாராட்டி சீராட்டி வளர்த்தார்களோ, யார் அவனுக்கு வழிகாட்டினார்களோ அவர்கள் அவனது தலைவனாக இருந்தாலும், பெற்றோர்களாக இருந்தாலும்அவர்களுக்கெல்லாம் மனிதன் அடிக்கடி தொல்லை தரவேண்டுமென தீர்மானிக்கிறான். நன்மை செய்தவர்க்கே தீமை செய்பவனாக மாறக் கூடியவன் மனிதன். யார் அவனைப் பேணிப் பாதுகாத்தார்களோ அவர்களையே கிண்டல் செய்பவன். சூழ்ச்சியாகத் திட்டங்கள் தீட்டி அவர்களை ஏமாற்றிப் புண்படுத்துபவன். நன்றியே இல்லாதவன் மனிதன்; விசுவாசம் துளியும் இல்லாதவன். காரியம் நடக்கும் வரை மிகப் பணிவாக இருப்பது போல் நடிப்பதில் கெட்டிக்காரன். தன் சொந்த வேலை முடிந்து விட்டதென்றால் அடுத்த நிமிடமே தனது தலைவனுக்கே குழிபறிக்க ஆரம்பித்துவிடுவான். மனிதனின் லட்சணம் இப்படி இருக்கும் போது மனித சமுதாயத்தை விட நம்முடையது தாழ்வானது என்று எப்படிக் கருத முடியும்" என்று பேசி முடித்தது.

இப்படியாக ஒருவர் பின் ஒருவராக எழுந்து அவரவர் பேச விரும்பியதைப் பேசினர். அவரவர் அந்தஸ்து அனுபவத்தை ஒட்டி, விலங்குகளிடம் இருக்கும் பல சிறப்பியல்புகள் மனிதனால் அலட்சியப்படுத்தப் படுகின்றன என்ற பாணியில் அவைகள் பேசின. தலைவரது பேச்சு இறுதி நிகழ்ச்சியாக இருந்தது. **கூட்டத்தினரைப் பார்த்து ரிஷி**, "பிரியத்துக்குரிய பிராணிகளே. நீங்கள் இதுவரை பேசிய அனைத்தும் உண்மைதான். தலைவர் எதையாவது செய்தால்அல்லது சொன்னால் அது நமது சொந்த நன்மைக்காகத்தான். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதும் நட்பு கொள்வதுமே இதன் நோக்கமாகும். ஆனால் நட்பு மலர்ந்தவுடன், ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டபின் மனிதன் சந்தேகப் பிராணியாக மாறி அதன் மூலம் அவனுக்கு ஏதோ ஒரு தீமை இழைக்கப்படுவதாகக் கருதுகிறான். நேருக்கு நேர் சந்திக்கும் போது அவன் பணிவுடன் பேசுகிறான்; ஆள் இல்லாத போது கேலிசெய்யத் துணிகிறான். உங்கள் முன்னிலையில் புகழ்ந்து பேசுவான்; நீங்கள் இல்லாத போது புண்படும் வண்ணம் இகழ்ந்து பேசுவான். இப்படியாக இரட்டை வேடம் போட்டுக் கொண்ட, அற்ப புத்தி உடையவனாய், விவேகத்தையும் தன் வாழ்வையும் அவன் வீணாக்குகிறான். இப்போது சுட்டிக்காட்டப்பட்ட இது போன்ற குறைபாடுகள் மனிதனிடம் இருக்கத்தான் செய்கின்றன. இவை அனைத்தும் உள்ளபடியே உண்மையானவைதான். உணவு, உறக்கம், உள்மூச்சு, வெளிமூச்சு முதலியவற்றில் மனிதனுக்கும், விலங்கு களுக்கும் முழுக்க முழுக்க வேறுபாடு இல்லை என்பது உண்மைதான்" என்றார்.

ரிஷி மேலும் தொடர்ந்தார். "இருப்பினும், விலங்குகளுடன் ஒப்பிடமுடியாத இணையற்ற ஒரு சிறப்பு மனிதனிடம் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன். சில விலங்குகளிடம் கொடுமையான இயல்பு புகுந்துவிட்டால் அதன்பின் அதை அவைகளால் மாற்றியமைக்க இயல்வதில்லை. புலி ஒன்று எத்தனை பசியுடன் இருப்பினும் சோற்றையோ, காய்கறிகளையோ புசிப்பதில்லை; புலால் உண்ணவே அது ஆசைப்படுகிறது. வெறும் டீ, பிஸ்கட்டுகள் புலியைத் திருப்தி செய்யாது. அதனுடைய பழக்கத்தை மாற்ற எவ்வளவு முயன்றாலும் நீங்கள் வெற்றி பெறமாட்டீர்கள். அதற்கு மாறாக மனிதர்கள் சிறிதளவு முயன்றாலும் கூட அந்தக் கொடுமையான உணர்வுகளையும் கெட்ட பழக்கங் களையும் மாற்றி அமைக்க இயலும். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள மிகமிக முக்கியமான வேறுபாடு என்னவெனில், **சிறிதளவு முயற்சியின் மூலமே தன்னை முழுமையாக மாற்றியமைக்க மனிதனால் இயலும்; அதே சமயம் விலங்குகளால் அப்படிச் செய்ய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடியாது**. தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும் திறமைகளும் ஆற்றல்களும் மனிதனிடம் மட்டுமே சிறப்பாகக் காணக்கூடிய ஒன்றாகும்".

இந்தக் கட்டத்தில் நரி எழுந்து பேசியது, "ஸ்வாமி! தங்களைத் தாங்களே மாற்றியமைக்கும் தனித்திறமை மனிதர்களிடம் இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்; ஆனால் அந்தத் தனித் திறமைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், இப்போது அவர்கள் அனுபவிக்கும் இந்த உயர்ந்த அந்தஸ்துக்கு அவர்கள் தகுதி உடையவர்கள்தானா?" என்று கேட்டது. அதைத் தலைவர் தெளிவுபடுத்தினார், "**தன்னை மாற்றியமைக்கும் திறன் இருந்தும் ஒருவன் பயன்படுத் தாதிருப்பானாகில் அவன் மிருகத்தைவிடக் கேவல மானவன் ஆவான்**". இதைக் கேட்டவுடன் எல்லா விலங்குகளும் படபடவென பலமாகக் கைகளைத் தட்டின. மஹரிஷி அப்போது சுட்டிக் காட்டியது மிக முக்கியமான கருத்தாகையால், . . . . நல்லது செய்யக் கூடிய ஆற்றல் பெற்றிருந்த போதும் அதைத் தன்னளவிலேனும் திருத்திக் கொள்ளவும் முன்னேற்றம் காணவும் பயன்படுத்தவில்லையேல், சந்தேகத்துக்கு இட மில்லாமல் மனிதன் மிருகத்தைவிடக் கேவலமானவன் தான் என்று மீண்டுமொரு முறை வலியுறுத்தினார். அனைத்துக் கல்வியையும் கற்று ஒன்று சேர்த்து வைப்பதால் என்ன பயன்? அது அவனுடைய நம்பிக்கையை மாற்றிவிடுமா என்ன? கெட்ட எண்ணங்கள் அவனது தலையில் நுழைந்தவுடன், சிந்திக்கும் ஆற்றலானது மழுங்கி அவன் மடையனாகிவிடுகிறான். கற்பதிலும் ஆற்றல் பெற்றிருப்பதிலும் மனிதன் அடைந்துள்ள அந்தஸ்து உயர்வானதுதான். ஆனால் இதுவரை அவன் கற்ற கல்வி அனைத்தும் சில ரொட்டி களைப் பெறுவதற்காகத்தான்; வயிற்றை நிரப்பி, வாழ்க்கையை ஓட்டவே அவர்கள் அதைப் பயன்படுத்துகின்றனர்".

தலைவர் கூறிய கருத்தை ஒட்டி நரி சில கருத்துக்களை கூறியது. "வாழ்க்கையை ஓட்டுவதற்காக மனிதன் அனைத்து வகையான அநியாய வழிகளையும் பின்பற்றுகிறான். இதைப் பொறுத்தவரை மனிதனைவிட விலங்குகள் மேலானவைதான் என்பதில் சந்தேக மில்லை". தனது சொல் ஜாலங்களில் மூழ்கிப்போன நரி தொடர்ந்து அதே பாணியில் சற்று நேரம் பேசியது. "நமது ஜீவனத்துக்குரியவற்றை நியாயமான வழிகளில்தான் நாம் எப்போதும்சம்பாதிக்கிறோம். எனவே மனிதனுடன் ஒப்பிடும் போது எல்லா வழிகளிலும் நாம் மிகவும் மேம்பட்டவர்கள்தான்; உள்ளபடியே நாம்தான் மிகமிகச் சிறந்தவர்கள்". இந்தக் கட்டத்தில் அந்த கூட்டத்தி லிருந்த அனைத்து நான்கு கால் உயிர்களிட மிருந்தும் உற்சாக ஆரவாரம் வெடித்தது. ஆனால் நரியின் பேச்சு அதன் எல்லையை மீறிவிட்டபடியால் சுத்தியலைத் தட்டி தலைவர் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார். அதன்பின் ரிஷி, மானிடர்கள் இணையற்றுத் திகழ்வதற்குரிய முக்கியமான வேறு ஒரு வித்தியாசத் தையும் விளக்கினார். "**மாயையை வெல்ல மனிதனால் முடியும். அதை வென்றவுடன் ஆத்மாவை உணர்ந்து அனுபவிக்கவும் முடியும்; அதன் பின் நிர்வாண நிலையையும் அவனால் அடையமுடியும். விலங்குகளுக்கும் மனிதர்களு க்கும் இடையே உள்ள மிகமுக்கியமான வேறுபாடு இதுதான்**".

"மாயையை வெல்வதற்குரிய ஆற்றலும் அதிகாரமும் உடையவர்கள் மானிடர்கள். சற்று சிரம மெடுத்துக் கொண்டு முயல்வானாகில் மனிதனால் ஆத்மாவை நேரிடையாக அனுபவிக்க முடியும். ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் நிர்வாண நிலையையும் அவனால் அடைய முடியும். விலங்குகளாகிய உங்களிடம் இவற்றைக் காண இயலாது. அன்புக் குழந்தைகளே! ஆங்கிலத்தில் மனிதச் சமுதாயத்தை மொத்தமாகக் குறிப்பிட MAN எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அதே சொல் சமஸ்கிருதத்தில் 'மானவ' என இருக்கிறது. M-A-N என்பதில் உள்ள 'M' என்பதன் உட்பொருள் என்ன வெனில் மாயையைப் பிரித்தறியும் ஆற்றலும் அதை அகற்றும் ஆற்றலும் பெற்றவன் மனிதன் என்பதே. ஆத்மாவைக் காணும் ஆற்றல் பெற்றவன் என்பதைக் குறிப்பது ('மேன்' என்பதில் உள்ள) இரண்டாவது எழுத்தான 'A' ஆகும். ஞானத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கும் நிலையைக் குறிக்கும் நிர்வாண நிலையைக் குறிப்பது M-A-N ல் உள்ள மூன்றாவது எழுத்தான 'N' ஆகும். சுருக்கமாகக் கூறுவதானால் 'M' மாயையை அகற்றுவது; 'A' ஆத்மாவைக் காண்பது; 'N' நிர்வாண நிலையை அடைவது என்று கூறலாம். நிர்வாண நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைதல் என்பது இன்பத்திலும் ஆனந்தத்திலும் ஒன்றிவிடுதல் எனப் பொருள்படும். எனவே, **மாயை எனும் அறியாமையை அகற்றி, ஆத்மாவைக் கண்டு, உன்னத நிலையான ஆனந்தத்தில் ஐக்கியமாகிறவனே உண்மையான மானிட உயிர் அல்லது மனிதன் ஆவான்**".

ரிஷியின் உரை நிறைவு பெற்றவுடன் அனைத்து விலங்குகளும் தலை தாழ்த்தி வணங்கி, மேற்படி மூன்று நிலைகளை அவைகளால் அடைய முடியாது என்பதை ஏற்றுக் கொண்டன. இருப்பினும் அதன்பின்னும், "அனைத்து மானிடர்களாலும் அந்நிலையை அடைய முடியுமா?" என்று ஒரு வினா எழுப்பப்பட்டது. "முடியாது. ஒரு சிலரே அடைவர்" என்று விடை வந்தது. "அந்தத் துறையில், நம்மைப் போன்றே ஒரு முயற்சியும் செய்யாதவர்கள் பலர் இருக்கின்றனர்; அவர்களை விலங்குகளிலிருந்து வேறுபடுத்துவது முழுக்க முழுக்க நியாயமற்றது" என்று அவைகள் முடிவு செய்தன. அதை மஹரிஷியும் ஏற்றுக் கொண்டார், "ஞானம், ஆனந்தம் அடைவதற்குரிய ஆற்றல் மனிதர்களிடம் பெரிய அளவில் இருந்த போதும், அவர்கள் அத்துறையில் அந்த ஆற்றலை வளர்த்துக் கொள்ளாமல்தான் இருக்கிறார்கள்; அதனால் அவர்கள் தம் வாழ்வில் அதிக இன்பம் அடைய முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதும் உண்மை தான்" என்று கூறினார்.

அதன்பின் தன் சொந்த விஷயமொன்றை அதாவது அவர் ஏன் அந்த வனத்தில் வாழ வந்தார்? என்பதற்கான காரணங்களை விளக்கினார். "மனிதன் இந்த உன்னத இயல்புகளில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. யார் தொல்லை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் தொல்லை கொடுப்பவைகள் விலங்குகள்; மற்றபடி அவைகள் ஒன்றுடன் ஒன்று சமாதானமாகவே வாழ்கின்றன. ஆனால் மனிதனோ தொல்லையே தராதவனுக்குக் கூட தொல்லை தருபவனாக இருக்கிறான். ஒரு காரணமும் இல்லாமல் மற்றவர்களை வசைபாடவும் தொல்லை தரவும் செய்கிறான். எந்தவித இன்னலும் செய்யாத கபடமற்ற அப்பாவி மக்களுக்கு இடையூறு செய்கிறான். உரிமையே இல்லாத பல விஷயங்களில் சம்மந்தமில்லாமல் தலையிடவும் செய்கிறான். இந்தக் காரணங்களுக்காகத்தான் ரிஷிகள் மனிதர்களைவிட்டுப் பிரிந்து வனத்தில் வந்து வாழ்கிறார்கள். மனிதனிடம் சுயநலம் பெருகிக்கொண்டே இருக்கிறது. அவன் என்ன பேசினாலும், என்ன நினைத்தாலும், என்ன செய்தாலும் அனைத்திலும் சுயநலம் நிரம்பியிருக்கிறது. விலங்குகள் மற்ற விலங்குகளுக்கு இடையூறு செய்வதில்லை; சொத்து சேர்ப்பதில்லை. **எனவே பல வழிகளில் மனிதன் விலங்குகளைவிடக் கேவலமாகவே நடந்து கொள்கின்றான்**" என்று கூறி தலைவர் தன் உரையை நிறைவு செய்தார்.

"ஜெய் சாயி ராம்"

திரு.க.மகேஸ்வரன்,
ஆன்மீக இணைப்பாளர்,
வடபிராந்தியம்.

## என்ன ஆசை இருக்க வேண்டும்?

தன்னைத்தானே உணரும் ஆசை.

தன்னைச்சுற்றியுள்ளோருக்கு உதவும் ஆசை.

துயருற்றவர்கள்துயர்களைய ஆசை.

உயிர்களெல்லாம் ஒன்றெனக் காண ஆசை.

நன்றி; ராமகிருஷ்ண விஜயம்- ஒக்டோபர் 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# மனிதன் தெய்வீகமானவன் ஆனால் இன்று?

"மனிதன் தெய்வீகமானவன் ஆனால் இன்று அவன் மிருகத்திலும் கீழ்நிலையில் உள்ளான். போதனைகள் மூலம் மனிதனை மிருக நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு கொண்டுவரவே தான் வந்துள்ளேன்" என பகவான் கூறுகின்றார்.

மிருகங்கள், பறவைகள் தம் தர்மத்தின்படி வாழ்கின்றன. ஆறறிவு படைத்த மனிதனோ அதர்ம வழியில் போய் கொண்டிருக்கின்றான். பாபா சில உதாரணங்கள் மூலம் சுட்டிக்காட்டுகின்றார்.

மிருகங்கள் தன் இனத்தை கொல்வதற்கு ஆயுதங்கள் செய்வதில்லை. மனிதனோ தன் இனத்தைக் கொல்வதற்கு ஆயுதங்கள் செய்கின்றான்.

பசு, மனிதன் கழித்த வைக்கோலையும், கழுநீரையும் உண்டுவிட்டு சுத்தமான பாலைத் தருகின்றது. அதன் நெஞ்சில் பொறாமை, வஞ்சகம் சுயநலம் போன்ற துர்க்குணங்கள் இல்லை. ஆனால் மனிதனோ பல வகையான சுவையான பண்டங்களைச் சாப்பிடுகின்றான். அவன் மனதில் வஞ்சகம், பொறாமை, சுயநலம் போன்ற எல்லாத்துர்க்குணங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

காகம் ஒரு இரையைக் கண்டால் தன் இனத்தை, கத்தி அழைத்து பகிர்ந்து உண்ணுகின்றது. ஆனால் மனிதனோ இப்படியில்லை. மாமரம் தன் காய்கள், பழங்களை மற்றவர்களுக்கு பசிதீரக் கொடுத்துதவுகின்றது. மனிதனிடம் ஏராளமான பணம் இருந்தாலும் ஏழை எளியவர்களுக்கு ஏன் சொந்த உறவுகளுக்கு கூட உதவி செய்வதற்கு முன்வருவதில்லை.

எறும்புகள் பாடசாலைகளிலோ, கலாசாலைகளிலோ கல்வி பயிலவில்லை. அவை ஒன்றின் பின் ஒன்றாக ஒழுங்கான வரிசையில் செல்கின்றன. மானிடரோ தமது சுயநலத்தினால் ஒரு ஒழுங்கு விதிகளையும் கடைப் பிடிப்பதில்லை.

பறவைகள் மிருகங்கள் போன்றவைக்கு ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள், விகாரைகள் தேவையில்லை. அவை தம் தர்மத்தின் படி வாழ்கின்றன.

எல்லா மதங்களும் மனிதனை தர்ம வாழ்க்கையை கடைப்பிடிக்க போதிக்கின்றன. இந்து மதம் "அன்பே சிவம் " என்றும் கிறிஸ்தவ சமயம் "உன்னைப் போல் அயலவனை நேசி" என்றும், இஸ்லாம் சமயம் சகோதரதத்துவத்தையும் புத்தசமயம் அன்பையும் அகிம்சையையும் போதிக்கின்றன.

ஒவ்வொருவரும் தம் தம் சமயங்களை சரிவர கடைப்பிடித்தால் உலகமே அன்பு மயமாகவிருக்கும். உள்ளத்தில் அன்பிருந்தால் ஒரு உயிருக்கும் தீங்கு செய்யமாட்டார்கள். மனிதரை நல்வழிப்படுத்தவும் அவர்களின் வாழ்க்கையின் நோக்கத்தைப் புரியவைக்கவுமே சமயங்கள் தோன்றின. பூகோளவேறுபாட்டுக்கமைய கலை கலாச்சாரத்துக்கமைய இந்த மதங்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் தோன்றின. ஆனால் அவை எல்லா வற்றினதும் அடிப்படைப் போதனை அன்பு ஒன்றே. இந்த அன்புதான் உலகில் பல்வேறு கலை கலாச்சாரமாக உருமாற்றம் பெற்றுள்ளது. ஆனால் மனிதன் இவற்றின் அடிப்படை உண்மையை அறிந்து கொள்ளாமல் போட்டி பொறாமையில் ஈடுபட்டு வாழ் நாளை வீணாக்கிக் கொள்கிறான்.

வாழ்க்கையின் குறிக்கோள் தெரியாமல் அற்ப சுகம் தரும் விடயங்களில் ஈடுபட்டு அகங்காரத்தை வளர்த்து இன்னும் பாவச்சுமையைக் கூட்டிக் கொள்கிறான்.

உலகிலுள்ள சமயங்கள் எல்லாம் மனித குலத்திற்கு நல்லவற்றையே போதித்து இறைவனை அடையும் பாதையைக் காட்டுகின்றன. ஆகவே சமய போதனைகளை நடைமுறைப்படுத்தி ஆத்ம விடுதலை அடைந்து தெய்வீக நிலையை அடைவோமாக!

"ஜெய் சாயி ராம்"

ஸ்ரீ.துவாரகா
யாழ் நிலையம்.

(பகவானின் அருளுரைகளிலிருந்து பெறப்பட்டவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானை நோக்கிய பயணம்

**"என்னை நோக்கி நீங்கள் பயணம் செய்யும் போது உங்களோடு கூடவே நான் பயணம் செய்வேன்"** பகவான் ஸாயீஸ்வரரின் இந்த ஆறுதல் வார்த்தைகள் அச்சத்தை – பயத்தை விரட்டியடிக்கும்.

பகவானின் அகில உலக அமைப்பின் இரண்டாவது மாநாட்டு அழைப்பிதழ், பகவானின் ஐம்பதாவது பிறந்தின விழாவின் அழைப்பிதழ் ஆகிய இரண்டும் எனக்குக் கிடைத்தன. அச்சமயம் நான் கொழும்பு கிறான்பாஸில் உள்ள சுலைமான் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தேன். அழைப்பிதழ் கண்டவுடன் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனேன். என் மகள் ரவிந்திரா தேவியையும் அழைத்துக் கொண்டு விழாவில் கலந்து கொள்ள அவசர அவசரமாக ஏற்பாடுகளை செய்தேன். கொழும்பிலிருந்து சுமார் இருபத்தைந்து பேர் விழாவில் கலந்து கொள்ள முன்வந்தனர். திரு.எஸ்.டி.சிவநாயகம், நீதி அரசர் திரு.சில்வா, ஆகியோர் அந்தக் குழுவில் இடம் பெற்றனர். அனைவரும் யாழ்தேவி மூலம் யாழ்ப்பாணம் சென்றடைந்தோம். சுபாஸ் ஹொட்டலில் அன்று இரவு தங்கினோம். மறு நாள் அதிகாலை புறப்பட்டு "ஓம் ஸ்ரீ சாயிராம்" என்று குரலெழுப்பி தனியார் பஸ் வண்டி மூலம் பலாலி விமான நிலையத்தை சென்றடைந்தோம். காலை 8 மணிக்கு "ஏயர் லங்கா" விமானம் திருச்சிக்குப் புறப்பட பலாலி விமான நிலையத்திற்கு வந்துகொண்டிருந்தது. ஆனால் தரையில் இறங்கவில்லை. ஆகாயத்தில் 4, 5 தடவை சுற்றி வட்டமிட்டபடியிருந்தது. சிறிது நேரத்தில் விமானம் மறைந்துவிட்டது. எல்லோருக்கும் பெரும் ஏமாற்றம். விமான நிலையத்தில் ஒரே பரபரப்பு. அப்போது நான் பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்தேன். விமான நிலைய அதிகாரிகளோடு என்னை பேசுமாறு கேட்டுக் கொண்டனர். விமானநிலைய அதிகாரிகளோடு பேசினேன். விமானத்தில் ஒரு கோளாறு, அது தரையில் இறங்குமுன் விமான ஓடுபாதையில் ஓடும் சில்லுகளை இறக்கி உள்ளே இழுத்து சோதித்தபோது வெளியில் வந்த சில்லுகள் மீண்டும் உள்ளே நுழைய முடியாமல் போய்விட்டதாம் என்று சொன்னார். அதனால் விமானம் கட்டுநாயக்கா சென்றுவிட்டது.

காலை உணவு தந்தார்கள். மழை லேசாக தூறிக்கொண்டு இருந்தது. 10 மணியளவில் குளிர்பானம் தந்தார்கள். மதியம் நல்ல சாப்பாடு தந்தார்கள். ஸ்வாமிபியிடம் பிரயாணம் செய்வதற்கு வந்த நாங்கள் விமான நிலையக் கட்டிடத்தின் தரையில் உட்கார்ந்தபடி பஜனைசெய்து கொண்டிருந்தோம். ஒருசிலர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது. விமானம் வருவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. எல்லோரும் திரும்பி யாழ்ப்பாணம் சென்று மறு நாள் காலை பிரயாணம் செய்யலாம் என்று தீர்மானித்து சாமான்களை தூக்குவதற்கு முயற்சிக்கும்போது, விமான நிலைய அதிகாரி வேகமாக எங்களிடம் வந்து நல்ல சேதி; "விமானம் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருக்கின்றது" என்று சொன்னார். அப்பொழுது எங்கள் குழுவில் வந்திருந்த வயது முதிர்ந்த பெண்மணி "எந்த விமானம் வருகிறது, காலையில் வந்த விமானமா? அந்த விமானத்தில் நம்பிப் பயணம் செய்யலாமா?" என்று கேள்வி எழுப்பினார். "நீங்கள் விமானத்தை நம்பி பயணம் செய்கின்றீர்களா? பகவான் பாபாவை நம்பி பயணம் செய்கிறீர்களா?" என்று திரு.சிவநாயகம் ஒரு போடு போட்டார். மனுஷி மேற்கொண்டு எக் கேள்வியும் கேட்காமல் "ஸாயிராம்" என்று பிரார்த்தித்தார்.

விமானம் வந்து சேர்ந்தது. அனைவரும் விமானத்தில் ஏறிக்கொண்டோம். விமானம் ஆகாயத்தில் எழுந்து பறந்தது. "ஸாயிராம் ஸாயிராம்" என்னும் ஒலி விமானத்தில் ஒலியையும் விட உரமாக சப்தமாக எழுந்தது; திருச்சி சென்றடைந்தோம். அந்த விமானம் திருச்சி வந்து தரை இறங்க முடியாமல் இலங்கைக்கு திரும்பி சென்றால் பகவானுடைய பக்தர்களுக்கு எவ்வளவு அவமானம். பகவானைப் பலர் கேலி செய்திருப்பார்கள். அந்த விமானம் 32 பேர் பயணம் பண்ணக் கூடிய சிறிய விமானம். 25பேர் ஸ்வாமியின் ஐம்பதாவது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் செல்பவர்கள். விமானத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறை இலங்கையில் சீர் செய்து சுவாமி தன் பக்தர்களைப் பத்திரமாக அழைத்து சென்றார். " என்னை நோக்கி நீங்கள் பயணம் செய்யும் போது உங்களோடு கூடவே நான் பயணம் செய்வேன்". இந்த சம்பவத்தை ஒரு கணம் எண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள். "பத்திரமாக உங்களைக் கொண்டு செல்வேன், உங்களுக்குப் பாதுகாப்பாக நான் இருப்பேன்" என்று பகவான் கூறியுள்ளார்.

மாநாட்டில் கலந்து மட்டற்ற மகிழ்ச்சியோடு புட்டபத்தியிலிருந்து பெங்களூர் நோக்கி பஸ் மூலம் திரும்பிக் கொண்டிருந்தோம். சுவாமியினுடைய பஜனைப் பாடல்களுடன் உற்சாகமான பயணம். எல்லை இல்லா மகிழ்சி, சுவாமியைப் பார்த்தால் பசி தீரும் அழகான முகம் பெண்களே வெட்கித் தலைகுனியும் ஒய்யார நடை, அருள் பொங்கும் அழகான கண்கள், அமுதைப்பொலியும் வசீகர கண்கள், ஒவ்வொரு வரும் சுவாமியைப் பற்றி பேசிக் கொண்டே வந்தோம். பெங்களூர் வந்து இறங்கியதும் ஓர் அதிர்ச்சி. எங்களோடு வந்திருந்த ஒருவரின் சூட்கேஸ் தஸ்தாவேஜுகள் அடங்கிய சிறிய பெட்டிகளைக் காண வில்லை. அப் பெட்டியில் அவருடைய பாஸ்போட், பிரயாண டிக்கட், பணம் எல்லாம் காணாமல் போய்விட்டது. அந்த பஸ்சில் பொலிஸ் ஸ்டேசன் சென்று முறைப்பாடு செய்தோம். அவர்கள் முறைப்பாடுகளை எழுதிக் கொண்டு நாங்கள் தங்கும் ஹொட்டலின் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

மகிழ்ச்சியோடு திரும்பிய எங்களுக்கு ஒரே கவலையாகப் போய்விட்டது. சுவாமியின் பஜனைப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தோம். 30 நிமிடத்தில் ஹொட்டல் அழைப்பாளர் வந்து "பொலிஸ் வருகிறார்கள் புட்டபத்தியிலிருந்து பெங்களூர் பஸ்சில் ஒரு சூட்கேஸ்சும் டொக்கிமென்ட் பெட்டியும் கண்டெடுத்திருக்கிறார்கள் அவற்றைப் பார்வையிட ஆயத்தமாக இருங்கள்" என்று சொன்னார். பொலிஸ் வந்தார்கள்; திரு.சிவநாயகமும் பெட்டியின் சொந்தக்காரரும் நானும் பொலிஸ் ஜீப்பில் ஏறிக் கொண்டோம். பொங்களூர் புட்டபர்த்தி வீதியில் 30 நிமிடம் பிரயாணம் செய்தோம். ஒரு மரத்தின் கீழ் ஒருவர் சூட்கேஸ் தஸ்தாவேஜுக்கள் அடங்கிய பெட்டியோடு உட்கார்ந்திருந்தார். பெட்டியைத் தவறவிட்டவர் அவசர அவசரமாக இறங்கினார். நாங்களும் இறங்கினோம். பெட்டி அவர்களுடையது தான். திறந்து பார்த்தார் எல்லாப் பொருட்களும் இருந்தன. தஸ்தாவேஜுகள் அடங்கிய பெட்டியைத் திறந்தார் என்ன ஆச்சரியம்! பாஸ்போட், விமான டிக்கட், பிரயாண காசோலை, பணம் எல்லாம் ஒன்றும் குறையாமல் இருந்தது. ஸாயிராம் என்று சொல்லிய வண்ணம் அவர் மரத்தின் கீழ் பெட்டியை வைத்து அமர்ந்திருந்தவருக்குப் பணம் கொடுத்தார். அவர் பணம் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். எல்லையில்லா மகிழ்ச்சியோடு பெங்களூரை நோக்கி பொலிசாரோடு திரும்பினோம்.

பகவான் சொல்லியுள்ளார்; "என் தரிசனம் பெற்று உங்கள் வீட்டை நோக்கி திரும்பி வீடு செல்லும் வரை உங்களோடு நான் கூடவே பயணம் செய்வேன்". ஆகவே தான் தொலைந்த பெட்டிகள் கிடைத்தன.

இதுவரை பகவான் ஸ்ரீஸாயிஸ்வரரை நோக்கி பக்தியோடு நம்பிக்கையோடு பூர்ண சரனாகதியோடு யாத்திரை சென்றவர்களில் பொருள் இழந்தவர்கள் என்று எவரும் இல்லை. அந்தப் பெட்டியைத் தவறவிட்டவர் திரு.சில்வா என்னும் நீதியரசர். பிற்காலத்தில் பிரதம நீதியரசராக இலங்கையில் பதவியுயர்வு பெற்றிருந்தார். சுவாமியின் வார்த்தைகள் நீரில் எழுதிய வார்த்தைகள் அல்ல, கல்லில் எழுதிய வார்த்தைகள். கடவுளின் வார்த்தைகள், அவைகள் போலிகள் அல்ல, சத்திய வார்த்தைகள். நம் உள்ளங்களைத் தூய்மைப் படுத்துவோம்.

பூமியை நன்றாக உழுது, முள், கல் இவற்றை அகற்ற வேண்டும். நல்ல விதை நெல்லைத் தெரிந்து எடுக்க வேண்டும். களைகளை அகற்ற வேண்டும். அப்போது நல்ல விளைச்சளைக் காணலாம். முள்ளும், கல்லும் உள்ள நிலத்தில் விதைக்கப்படும் நெல் பயன்தராது. நம் அழுக்காறு, வெகுளி, இன்னாசொல் அகற்றி அன்புடையதாக்க வேண்டும். கலங்கிய குளத்தில் உள்ளுருவம் தெரியாது. துருப்பிடித்த இரும்பை காந்தம் இழுக்காது. நம் மனதைப் புனிதப்படுத்த வேண்டும். வெள்ளை நிறப்பூவல்ல, வேறு எந்தமலரும் அல்ல, உத்தமமான இறைவன் வேண்டுவது உள்ளக்கமலம். பொன்னால் இறைவனை வேண்ட முடியாது. பட்டங்க ளால் பதவிகளால் இறைவனின் அன்பை அருளை பெறமுடியாது. பகவான் சொல்கிறார்; "காய்ந்து போகும் மலர்களையும் அழுகிப்போகும் கனிகளையும் சுமந்து என்னிடம் வராதீர்கள். அன்பு மயமான உள்ளத்தோடு வாருங்கள். உங்களை நிரப்பி அனுப்புவேன்" அன்பு ஆட்சி செய்யும் இடம் பகவான் வாழும் இடம். அவர் இல்லாத இடமே இல்லை. எங்கள் முன்னால் அவர் அந்தர்யாமி. **அவர் வாழும் காலத்தில் வாழும் நாம் பாக்கிய சாலிகள். அவர் பெயர் சொல்பவர்கள் புண்ணிய ஆத்மாக்கள்.**

"ஜெய் சாயி ராம்"

திரு. செல்லையா இராஜதுரை
( ஸ்ரீலங்கா - முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் )
புட்டபர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# "இளைஞர்களுக்கு ஆத்மீகவாழ்வின் நன்மைகள்"

01) **ஆத்மீக வாழ்வு இளைஞர்களுக்கு அவசியம் ஏன்?**

- இளைஞர்களே இந்நாட்டின் வருங்காலச் சொத்துக்கள்.
- இளைஞர்களின் உடல், உள்ளம் இரண்டும் வலிமை மிக்கவை.
- முதுமைத் தளர்ச்சி ஆத்மீக சாதனைகளுக்கு அனுகூலமாக இல்லை.
- இளமையில் கடவுளுக்காக ஏங்குபவன் பேறு பெற்றவன்.
- ஆத்மீக சாதனைகளுக்கு மிகவும் சாதகமான பருவம் இளமைப்பருவமே.
- "Even at 60you should feel like age sixteen" (60 வயதில்கூட நீங்கள் 16 வயதாக உணர வேண்டும்)

02) **கடவுள் மனிதனைப் படைத்தது ஏன்?**

- ஆத்மீக முயற்சிகளை மனிதன் தனது சிறுபராயம் தொடக்கம் மேற்கொண்டு கடவுளை உணர்தலுக்கு (Self realization - ஆத்ம அனுபவம்) அல்லது கடவுட் காட்சியைப் பெற்று அனுபவிப்பதற்கு.
- இப்பிரபஞ்சத்தில் ஆன்மீக உலகங்கள், சுவர்க்கலோகங்கள், நரகங்கள் (Hells) என்பன நிச்சயமாக உண்டு. (சான்று ஸ்ரீமத் பாகவதம்)
- எனவே இளைஞர்கள் ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டு, கடவுளின் கிருபையைப் (grace) பெற்று ஆன்மீக உலகங்களில் இறைவனுடன் நெருக்கமாக வாழ முயற்சிக்க வேண்டும்.

03) **ஆதிசங்கரரின் பஜகோவிந்தம்**

- குழந்தைப் பருவத்தில் விளையாட்டிலும், இளமைப் பருவத்தில் புலனின்பங்களை நாடியோடுவதிலும், நடுத்தரவயதில் சொத்துச் சேர்ப்பதிலும், வயோதிபத்தில் கடந்த காலத்தை நினைத்துக் கவலைப்படுவதிலம் வாழ்நாள் கரைந்தோடு கின்றது.
- வாழ்க்கை ஆழமான கர்மவலையிற் சிக்கி அழிகின்றது.
- எனவே கடவுளை நினைத்துப் பழகுவதற்கு காலம் எங்கே?

04) **அனைத்து ஆன்மீக இலக்கியங்களினதும் சாராம்சம் என்ன?**

- மனதை இறைவனில் நிலைநிறுத்துதல்
- இறைவனுடைய பாதத்தில் அல்லது அழகிய திருமுகத்தில் அல்லது இறைவனின் அழகிய, பரி சுத்தமான புன்சிரிப்பில் மனத்தை நிறுத்தப்பழக வேண்டும்.
- இறைவனுடன் ஒன்றித்தல். (Union with God)

05) **நாமஸ்மரணை**

"The grace of God is like an Insurance. It will help you in your time of need with out any limit" - Baba

"இறைவனுடைய அருள் ஒரு காப்புறுதி போன்றது. உங்களுக்குத் தேவைப்படும் போது அது எல்லையில்லா உதவிகள் செய்யும்" – பாபா

ஆகவே இறைவனுடைய நாமத்தை திரும்பத் திரும்ப ஜபித்து இறைவனின் முடிவற்ற அருளைப் பெற நாம் முயறசிக்க வேண்டும்.

06) **பகவான் அருளிய முறையில் ஒளித்தியானம்**

செய்யப்பழகி, அதனைத் தினந்தோறும் காலையும், மாலையும் செய்து வரவேண்டும். அதன் போது அடர்ந்த அன்பு ஒளிக்கற்றை உலகமெல்லாம் பரவி இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து சுபீட்சத்தை ஏற்படுத்துவதாக மனதிற் பாவனை செய்ய வேண்டும்.

07) **இலங்கை மக்களும், இன்றைய பிரச்சினைகளும்.**

இராவணன் காலத்திலிருந்து இலங்கையில் பிரச்சனைகள் உண்டு. துன்பங்கள் நகரும் முகில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(pssing clouds). யாரெல்லாம் இறைவனை நினைத்து இருக்கின்றார்களோ அவர்கள் கடவுளால் நிச்சயம் காப்பாற்றப்படுவார்கள். இலங்கை அன்று போல் இன்றும் இனியும் வளமுடன் இருக்கும் என எங்களுடைய பகவான் உறுதியளித்துள்ளார்.

## 08) "Oh my Lord! forgive my forgetfulness"

ஓ! கடவுளே! எனது (உம்மை) மறக்கும் தன்மையை மன்னித்து விடும்" – கோல்ட்ஸ்ரெயின்.(Goldstein)

- இதனை நாம் ஒவ்வொருவரும் ஞாபத்தில் இருத்தி இறைவனை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க முயற்சிக்க வேண்டும்.
- ஏனெனில் எமது வாழ்வின் கடைசிக் கணத்தில் நாம் இறைவனை நினைப்பின் அல்லது இறை நாமத்தை உச்சரிப்பின் இறைவனுடன் நெருங்கியிருக்கும் பேரின்ப வாழ்வைப் பெறலாம்..
- மனித வாழ்க்கையின் அதியுயர் இலட்சியத்தை அடையலாம்.

(மனித வாழ்வின் அதியுயர் இலட்சியம் – மோட்சம்)

## 09) Tests

வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள் இரு நன்மைகளைத் தருகின்றன என்கிறார் பகவான்.

(i) Self confidence (தன்னம்பிக்கை)

(ii) Promotion (முன்னேற்றம்)

எனவே நாம் சோதனைகளைத் துணிவுடன் எதிர் கொண்டு தன்னம்பிக்கையையும், வாழ்க்கையில் உயர்ச்சியையும் எய்துவதற்கு நம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.

10) **அறிவுள்ள எல்லா மனிதர்களும் ஆத்மீக இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.** குறிப்பாக தலைசிறந்த பக்தி இலக்கியமாகிய

"ஸ்ரீமத் பாகவதம்"ஐத் திரும்பத் திரும்ப உயிருள்ள வரைப் படிக்க வேண்டும்.

**11) நாளாந்த கட்டுப்பாடும் ஒழுங்கும் ஆன்மிக சாதனையும்**

i) அதிகாலையில் துயிலெழல்

"Early to bed & Early to rise make a man Healthy, Wealthy & Wise"

ii) இறைநாமங்களையும், ஸ்தோத்திரங்களையும், மந்திரங்களையும் உச்சரித்தல்

iii) அதிகாலையில் குளிர் நீரில் குளித்தல்

(a) சித்த (உள்ள) சுத்தியையும், நோய்களிலிருந்து பாதுகாப்பையும், பாவ நீக்கத்தையும் எற்படுத்தும்.

(b) குளிக்கமுன், குளிக்கும் போது கட்டாயமாகக் காயத்திரி மந்திரத்தை சில தடவைகளாவது உச்சரிக்க வேண்டும்.

(iv) அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு என ஐந்து நேரங்களிலும் காயத்திரி மந்திரத்தை உக்சாடனம் செய்ய வேண்டும்.

(v) சைவ உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும். முருங்கைக்காய், உள்ளி, வெங்காயம் இவற்றை இயன்றவரைத் தவிர்க்க வேண்டும்.

இதனால் சாத்வீகமான நல்ல எண்ணங்கள் மனதில் தோற்றுவிக்கப்படும். எனவே வாழ்க்கை அமையிதியான முறையிற் செல்ல வழியேற்படும்.

(vi) Parents → Pay Rent

பெற்றோர்களைத் தினமும் வணங்கிச் சேவை செய்ய வேண்டும்.

(vii) மலிந்த கதைப் புத்தகங்கள் வாசித்தல், திரைப்படம் பார்ப்பதை முற்றாக விட்டுவிடவேண்டும்; அல்லது நன்றாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

(vii) "நல்ல புத்தகம், நல்ல நண்பன்"

எனவே சாயி இலக்கியங்களை தினந்தோறும் படிக்கும் பழக்கத்தை உடனடியாக ஏற்படுத்தி, மனதை உயர்நிலைக்கு மாற்ற வேண்டும். (Transformation)

**11) ஆத்மீக சாதனைகளின் பயன்**

இறைவனுடைய சாமீப (அருகிலிருப்பைப் பெறல்), சாரூப (இறைவனுருவைப் பெறல்), சாலோக (ஆன்மிக உலக வாழ்வைப் பெறல்), சாயுச்சியம் (இறைவனடன் இரண்டறக்கலத்தல்) ஆகிய இவற்றைப் பெறுதல். ஆன்மீக சாதனைகளின் மூலம் உறுதியாக்கப்படும் இன்பம், பேரின்பம் (Bliss) ஆகும்.

*"ஜெய் சாயி ராம்"*

*சி.சிவோதயன்*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# தீபாவளி

"தாய் நினைந்த கன்றே யொக்க, என்னையும் தன்னையே நினைக்கச் செய்து, தானெனக்காய் நினைத்தருள் செய்யுமப்பனை" கமல மலர்ப் பாதம் பணிந்து கருத்தில் கொண்டு தீபாவளி பற்றிச் சொல்ல முனைகிறேன்.

பண்டிகை என்பதும் துன்பங்களை மறந்து ஒன்று கூடி நல்லவை சிந்தித்து, செயல்படுத்தி, புனிதமான, புதியமனிதனாக நாம் பிறக்கும் நாள், அஹங்காரம் இறக்கும் நாள், அருள் சுரக்கும் நாள்.

மஹாவிஷ்ணு ஹிரண்யாட்ஷன் என்னும் அசுரனை வதம் செய்து அவனால் ஒழித்து வைக்கப்பட்ட பூமியை தன் வராக முகத்தில் இருக்கும் நாசிநுனியில் தாங்கியதாக விஷ்ணு புராணம் சொல்கிறது. அவ்வேளை ஆக்ரோஷமான வராகமூர்த்தி தனது கொம்புகளினால் பூமாதேவியை கீறியதால் அந்த நேரம் தோன்றியவன் நரஹாசுரன்.

இந்த நரஹாசுரன் பெயருக்கேற்றால் போலவே பிறந்தகுணம் மாறாமல் பெண்கள் பலரையும் கவர்ந்து சென்று துன்பப்படுத்தி இன்பம் கண்டான். பின் தனது பக்தர்களின், தேவர்களின் வேண்டுகோளிற்கு இரங்கி கிருஷ்ணர் தனது தேவி யாகிய பூமாதேவியின் அம்சமாகிய சத்யபாமை யுடன் கருடன் மீது சென்று நரகாசுரனை வதம் செய்து தனது பக்தர்களாகிய பெண்களை விடுதலை செய்தருளினார்.

ஆம் அசுரகுணம் மேலோங்கியதால் மானிடத்தன்மையாகிய பூமி பாதாளத்திற்குச் சென்றது. அசுரகுணம் அழிக்கப்பட வேண்டியதாலும், விஷ்ணு விற்கு தன் பக்தர்களே உயிர்மூச்சு என்பதாலும் தன் மூக்கின் மேல் அதைத்தாங்கினார். அதுவே இறைவனின் உயர்ந்த கருணை.

ஸ்வாமி சொல்கிறார் "நரஹ என்றால் நிரந்தரமான ஆத்மதத்துவம். அசுர குணங்கள் நரனிடம் நுழையும் போது, அவன் நரஹாசுரனாக மாறுகிறான், அப்படிப்பட்டவனிடம் தீமையான வற்றைத்தான் காண முடியும். எனவே தீயவர் சங்கத்தை விட்டுவிடு, நல்லவர்களுடன் சேர்ந்து கொள். அன்பின் தத்துவத்தை ஒவ்வொரு வருக்கும் பரவச் செய்ய வேண்டும்".(1)

"பூமியில் ஒவ்வொன்றும் சத்திய வடிவமான கடவுளின் அம்சமே. மனம் விஷ்ணு ஸ்வரூபம்" என்கிறார் நம் ஸ்வாமி. இதன் அடிப்படையில் அசத்தியம் அழிவதற்கு சத்தியம் உணரப்படல் வேண்டும். இதற்கு அடிப்படையாய் அமைவது அன்பாகும். எனவே தான் பூமாதேவி யாகிய சத்தியபாமா அன்பு மனமாகிய கண்ணனுடன் போர்க்களம் வந்து அசத்திய மாகிய நரஹாசுரனை வதம் செய்தாள். இங்கு அசுரத் தனம் அழிய "ஆத்மத்துவம் பிறந்தது" அதுவே அனைவருக்கும் ஒளியேற்றும் தீபாவளித் திருநாளாயிற்று. சத்தியஜோதி பெருநாளாயிற்று.

மேலும் ஸ்வாமி சொல்கிறார்: "கிருஷ்ணர் சத்தியபாமையில்லாமலே நரஹாசுரனைக் கொன்றிருக்க முடியும். நரஹாசுரன் கொடிய அரக்கன் அவன் தன்கையால் கொல்வதற்கு கூடத் தகுதியற்றவன் என்பதாலும், இறைவனைப் பற்றி இடைவிடாத சிந்தனையில் இருந்த பெண்களைத் துன்புறுத்தியதால் நரஹாசுரன் ஒரு பெண்ணின் கைகளாலேயே மரணம் அடைய வேண்டும் என்றும் சங்கல்பித்திருந்தார். அதன்படி சத்தியபாமாமையே அசுரனைக் கொன்றாள். அனைவருக்கும் விடுதலை கிடைத்தது.(2)

"படைப்பில் உள்ள அனைத்தும் தற்காலி கமானவை. சத்தியம், பிரேமை மட்டுமே நிலையானவை. இன்று மனிதன் பிரேமையைக் கைவிட்டு சத்தியத்தை மறந்து விட்டான். இந்நாடு எதிர் கொள்ளும் அனைத்துச் சங்கடங்களுக்கும் இதுவே அடிப்படைக்காரணம்". (3)

எமது அசுரமனதை அழிப்பதற்கே ஐம்மாதிரி விழாக்காலம். மதிதடுமாறி "விழாக் – காலம்" என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் மதுவில் தடுமாறி விழுங்காலம், என்றாகிப் போய்விட்டது. மாமிச உணவை மகிழ்வுடன் உண்ணும் காலம் ஆகி நரகத்துக்குச் செல்லும் சூரத்தனமாகி கொண்டாடப்படுகின்ற நிலைக்கு இன்று வந்திருக் கிறோம். துரதிஷ்ட வசமாக நரஹாசுரன் இறந்தநாள் என்று போய் நமக்குள் அவன் பிறந்தநாள் என்று கொண்டாடுகின்றோம். இது மாற்றமடைய வேண்டும். மனித உன்மத்தம் போய், மனித உன்னதமாக வேண்டும். அதுவே நரஹாசுரவதம், மனதிற்கு இதம், தெய்வீகப் பதம், சாயியின் அன்பு மதம். ஷிர்டிக்கு வருவோம். தீபாவளித் திருநாள் அங்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. காரணம் ஒரு அற்புதநிகழ்வு; அதைப் பார்ப்போம்.

மனம் எனும் சூதினைவெல்லும் மசூதிக்கு விளக்கேற்ற இறைவனே ஷிர்டிநாதனாக வந்து, வீடுவீடாய் சென்று வாயலிலே நின்று எண்ணெய் யாசகம் கேட்கிறார். அன்று மனித மதம் விட வில்லை. வாயலில் வந்த வாய்ப்பையே பூட்டு கிறது. அமைதியாக மசூதிக்குத் திரும்பிய ஷிர்டி தெய்வம், பாத்திரத்தில் எஞ்சி ஒட்டியிருந்த எண்ணெய்க்குள் தண்ணீரை விட்டு தான் அருந்துகிறார். மீண்டும் பாத்திரத்தை தண்ணீரால் நிரப்பி, அனைத்து விளக்குகளிலும் ஊற்றி, தீபம் ஏற்றி, இருளை ஒட்டியதைக் கண்ட, வாயிலைப் பூட்டி வாய்ப்பை இழந்தவர்கள் வாய் பிளந்து, தம்மை இழந்து சாயியை வீழ்ந்து சரணாகதியில் ஆழ்ந்து போயினர்.

ஆம், எங்கள் எண்ணத்தினைக் கேட்டவர், தண்ணீரை ஊற்றி இருள் போக்கினர். இதனால் தீபாவளி சிறப்புற ஷிரடியில் கொண்டாடப் படுகிறது.

தாய்ப்பையிலிருந்து வந்த மனிதன் நோய்ப்பை உடல் தாங்கி, வாய்ப்பை நழுவவிட்டால் மீண்டும் வாய்க்குமோ இப்பிறப்பு. 'வாய்ப்பையில்' வார்த்தைகள் வளமாக கொட்டுமெனில், தீர்ப்பை இறைவன் திருத்தியும் எழுதுவான்.

ஒரு பரமாத்ம ஜோதியிலிருந்து ஏற்றப்பட்ட ஜீவாத்மச் சுடர்கள் நாம். இதனால் போகு மிடர்கள். இதுவே தீபாவளிச் சுடர்கள்.

இந்தச்சுடர்களாய் ஆவதற்குரிய தகுதியை சுவாமி குறிப்பிடுகிறார். "இவ்வுடல் இறைவனின் இருப்பிடம். நீ உட்கொள்ளும் உணவு அத்தெய்வத்துக்கு அளிக்கும் படையல்" நீ நீராடு வது, உன்னுள் நின்ற தெய்வீக ஆன்மாவை சடங்கு முறையாக நீராட்டுவது. நீ நடந்து செல்லும் நிலம் அவரைச் சார்ந்தது. நீ துய்க்கும் இன்பம் அவருடைய நன் கொடை. நீ அனுபவிக்கும் துக்கம் நீ நல்வழியில் நடவாதிருந்ததைச் சுட்டிக் காட்டி மிகவும் கவனமாக நடக்க வேண்டும், என்ற எச்சரிக்கை என்று ஆழ்ந்த எண்ணம் கொண்டு வெய்யிலிலும் நிழலிலும், பகலிலும் இரவிலும், விழுப்பிலும் உறக்கத்திலும் அவரை நினைத்திருத்தல் வேண்டும். இதுவே உன் கடமை."(4)

இதை உணர்ந்தால் சாயியின் உடமை. இல்லையேல் பிறப்பே மடமை. மறையட்டும் மனதின் கருமை. பிறக்கட்டும் இன்றே புதுமை. உணர்வோம் சாயியின் அன்பை. இதுவே தீப நாளின் மகிமை.

படமாட்டேன் துயர் சிறிதும் படமாட்டேன் னினிநான்
பயப்படவுமாட்டே னுன்பதத் துணையே பிடித்தேன்
விடமாட்டே னேமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும் அடியேன்
கெடமாட்டேன் பிறர் மொழிகள்கேட் டிடவுமாட்டேன்
கிளரொளியம் பலத்தாடல் வளரொளி நும்மல்லால்
நடமாட்டேன் என்னுள்ளத்தே நான் சாகமாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்றானா னேனே.

– அருட்ஜோதி ராமலிங்க வள்ளலார்

**(21.10.2006 தீபாவளி தினத்தன்று யாழ் சத்தியசாயி நிலையத்தில் ஆற்றிய உரை)**

*"ஜெய் சாயி ராம்"*

*திரு.சி.சிவபாலன்.*
*யாழ்ப்பாணம்.*

*உசாத்துணை நூல்கள்:*

1) தமிழ் சனாதன சாரதி – ஜனவரி 5, 2003
2) த.ச.சா. ஜனவரி 2003
3) இறைவனோடு இனிய பயணம் – பக்.174
4) தமிழ் சனாதனா சாரதி நவம்பர், 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# விதியை வெல்ல முடியும்

ஒரு முறை தேவலோகத்தில் ஒரு பெரிய விழா நடைபெற்றது! தெய்வேந்திரன், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளையும் மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றிருந்தான்! அனைவரும் தேவலோகம் நோக்கி வந்தனர்! தேவலோக நுழைவாயில் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது! தேவர்கள் எல்லாம் வந்து விட்டனர்! சபை நிறைந்து விட்டது! மும் மூர்த்திகள் மட்டும் வரவேண்டும்! நிகழ்ச்சிகள் அவர்கள் வந்த பிறகே துவங்க ஆயத்த நிலையில் இருந்தன.

அந்த நேரம் பார்த்து ஒரு காகம் பறந்து வந்து நுழைவாயிலின் உயர்வான சுவர் மீது அமர்ந்தது!

முதலில் பிரம்மா வந்தார். அங்கு உட்கார்ந் திருந்த காகத்தைப் பார்த்தார்! ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய்விட்டார்.

அடுத்து வந்தவர் சிவபெருமான் அவர் சுற்றுச்சூழல் எதையும் கவனிக்காமல் உள்ளே நுழைந்தார். சிவபெருமானின் நெருங்கிய அனுசாசரர் களில் ஒருவரான யமதர்மராசாவும் அவருடன் வந்தார். காகத்தைப் பார்த்து ஒரு சூடான பார்வையைச் செலுத்தினார். அவர் கண்கள் சிவந்தன. அந்த முறைப்பைத் தாங்கமுடியாமல் காகம் நடுங்கியது. ஏன் இந்தக் கண்டிப்பு மிகுந்த பார்வை? காகம் விசனத்தில் ஆழ்ந்தது.

அப்போது விஷ்ணு வந்தார். அவரும் நேராகச் சபைக்குள் நுழைந்தார். விஷ்ணுவைத் தாங்கி வந்த கருடன் காகத்தின் பக்கத்தில் வந்து அமர்ந்தது. பறவை இனம் என்ற சலுகையோடு காகத்தைப் பார்த்தது. பயந்திருந்த காகம் கருடனை நோக்கி "அண்ணா எனக்குப் பயமாக இருக்கிறது, நீங்கள் தான் உதவவேண்டும். கருடன் கேட்டது ஏன் பயப்படுகிறாய்? என்ன உதவி?"

"சிவபெருமானுடன் வந்த யமதர்மன் என்னைப் பார்த்த பார்வை என் உயிரையே எடுத்து விடுவது போன்று அவ்வளவு சூடாக இருந்தது. என்னுயிர் போய்விடுமோ என்ற பயத்தில் நான் நடுங்குகிறேன். விஷ்ணுவின் வாகனமாகிய தாங்கள் தான் எனக்கு உதவவேண்டும்" என்று அழுதது.

கருடன் பார்த்தது! காகத்திற்கு உதவ வேண்டும் என தீர்மானித்து நிகழ்ச்சிகள் ஆரம்பித்ததும், காகத்தைத் தன்முதுகில் சுமந்து ஏழுமலைகள், ஏழுகாடுகள், ஏழு சமுத்திரங்கள் தாண்டி ஒரு தீவில் ஒரு மரத்தினருகில் கொண்டு விட்டுவிட்டு "உன்னைக் காப்பாற்றி விட்டேன். இனிமேல் யமதர்மராசனால் எதுவும் செய்ய முடியாது". என்று சொல்லிவிட்டு திரும்பவும் தேவலோக வாசலுக்கு வந்தது கருடன்.

நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து முதலில் பிரமா வந்தார். காகம் இருந்த இடத்தைப் பார்த்துவிட்டு எதுவும் சொல்லாமல் நகர்ந்தார்.

அடுத்து வந்த சிவபெருமானும், எதுவும் சொல்லாமல் எதையும் பார்க்காமல் கிளம்பிப் போனார். உடன் வந்த யமதர்மராசா, காக்கை இருந்த இடத்தைப் பார்த்தார். பின் கருடனைப் பார்த்தார். லேசாகச் சிரித்துவிட்டு நகர்ந்தார். கருடனுக்கு ஆச்சரியம். யமதர்மன் ஏன் சிரிக்கிறார்.

யமதர்மன் சொன்னார் "பிரமதேவன் உள்ளே போகும் போது காகத்தைப் பார்த்து, விட்டுப் போனார். அடுத்துவந்த நான் இப்படி எண்ணமிட்டேன். பிரம்மனின் கணக்குப்படி இந்தக் காகம் ஏழுகடல் தாண்டி, ஏழு மலைதாண்டி, ஏழு காடுகள் தாண்டி இருக்க வேண்டும். அங்கே தான் இதற்கு முடிவு ஏற்படும். ஆனால் காகமோ இங்கிருக்கிறது. பிரமன் கணக்குத் தப்பாகிவிட்டதா? தப்புமா? என்றெல்லாம் எண்ணி அதை முறைத்தேன். பிறகு திரும்பி வரும் போது காகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாததைக் கண்டு அதன் முடிவைச் சந்திக்க பிரமா ஏற்பாடு செய்து விட்டார் என்று சிரித்தேன்".

அப்படியானால் அந்தக் காகம் காப்பாற்றப் படவில்லையா? அதன் உயிர் போக நானா காரணமாகி விட்டேன்? என்று எண்ணி கருடன் பதறிற்று.

உடனே ஏழு கடல்களையும் மற்ற வற்றையும் தாண்டி காகத்தைக் காப்பாற்றப் பறந்தது. அங்கு சென்று பார்த்த போது காகத்தின் உடலை ஒரு பெரிய மலைப்பாம்பு விழுங்கிக் கொண்டிருந்தது. அதன் வால்ப் பகுதி மட்டும் உள்ளே சென்று கொண்டிருப்பதைப் பார்த்தது கருடன். **விதியை வெல்லவே முடியாதா?** உடனே தேவலோகம் திரும்பி யமதர்மனை இந்தக் கேள்வியைக் கேட்டு பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த கருடனிடம் யமதர்மன் பதில் சொன்னார்.

கருடா உனக்கு அறிவில்லை. காகத்துக்கும் புத்தியில்லை. விஷ்ணுவின் வெறும் சாரதியான உன்னை நம்பி காப்பாற்றும்படி கேட்டதால் அதற்கு அறிவில்லை. உன் புஜ பலத்தை நம்பி அதைக் காப்பாற்றுவதாக நீ வாக்குக் கொடுத்ததால் உனக்கும் புத்தியில்லை.

உன் பாதத்தைப் பிடிப்பதற்குப் பதிலாக நம் எல்லோருக்கும் தலைவரானவரும், சிருஷ்டிகர்த்தாவுமான இறைவன் விஷ்ணுவின் பாதத்தில் விழுந்திருந்தால் பிரம்மனே கட்டளையிட்டிருந்தாலும் நான் காகத்தைத் தொடப் பயந்து பின்வாங்குவேன். இந்தப் புனிதச் செயலைச் செய்யாமல் வாகனமாகிய உனது கால்களைப் பிடித்துக் கொண்டால் விதியை எப்படி வெல்லமுடியும்?

இதைப் போலத்தான் உலக மாந்தர்களும் யார் யாரையோ குரு என்றும், வழிகாட்டி என்றும், சாமியார் என்றும் போலி வேஷதாரிகளை நம்பி நேரத்தை வீணடிக்கிறார்கள். அப்படி எல்லாம் அலையாமல் **நேராக இறைவனைச் சரண் புகுந்தால் விதியினால் ஏற்படும் விளைவுகளை நிச்சயம் வெல்ல முடியும்** என்று சொல்லிமுடித்தார்.

இந்தக் கதையின் கருத்து மிகவும் தெளிவானது. பக்தர்கள் யார் யாரையோ நம்பி அங்குமிங்கும் அலைந்து திரியாமல் ஆதி புருஷரான பகவான் ஸ்ரீ சத்ய சாயியின் பொற் பாதங்களில் சரணடைந்தால், காப்பாற்றப்படுவது உறுதி. விதி வெல்லப்படுவது நிச்சயம்.

*"ஜெய் சாயி ராம்"*

*சனாதனா சாரதி ஆகஸ்ட் 1995*

*(சிறுவர் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.)*

## ஆன்மீகப் பயணத்திற்கு நான்கு வழிகாட்டல்கள்

"நடந்தவற்றை நினைத்து கடவுளுக்கு நன்றியாயிரு.
நடக்கப் போவதை நினைத்து கடவுளில் நம்பிக்கையாயிரு.
சுற்றிப் பார்த்துக் கடவுளுக்குச் சேவை செய்.
உள்ளே பார்த்துக் கடவுளைக் காண்."

"Look back and thank God.
Look ahead and trust God.
Look around and serve God.
Look within and see God."

**- B.N. நரசிம்மமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# மலை நாட்டிலிருந்து

சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர்கள் பயிற்சிப் பட்டறையொன்று மத்தியமாகாண சாயி இணைப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு பன்வில என்னும் இடத்தில் ஆனி மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் நாடத்தப்பட்டது. அப்பிரதேசத்தைச் சேர்ந்த பல பாடசாலைகளிலும் இருநது தமிழ் முஸ்லிம் ஆசிரியர்களும் அதிபர்களுமாக 47 பேர் பங்குபற்றினர் பிராந்திய வலயக்கல்விப் பணிப்பாளர்கள் இரண்டு நாட்களும் கலந்து கொண்டு சிறப்பித்தது மிகவும் உற்சாகத்தைத் தரக் கூடியாத இருந்தது. மத்திய இணைப்பாளர் தலைமையில் சென்ற தேசிய கல்விச் செயற்குழுவின் வளஆளுனர்கள் இப்பட்டறையை நடாத்தினர். முடிவில் சான்றிதழ்கள் வழுங்கப்பட்டன. பலர் புகழாரம் சூட்டிய அப்பட்டறையில் கலந்து கொண்ட ஒரு ஆசிரியை எமக்கு எழுதிய ஒரு கடிதத்தை கீழே தருகிறோம்.

**தமிழில் மனித மேம்பாட்டு கல்வி தந்த சாயி சமித்திக்கு சின்னஞ் சிறிய நன்றிகள்.**

" தவறான பாதையில் எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் பரவாயில்லை – திரும்பி வா"

இப் பிரபஞ்சத்தின் மூல மூர்த்திக்கு நன்றியும் வணக்கமும்!

காலையில் எழுந்ததும் நாம் விழிக்கும்
கண்ணுக்கு தெரிந்த கடவுள் – அந்த
மூல ஒளிக்கு நன்றியும் வணக்கமும்!!

இக் கருத்தரங்கின் மூல மந்திரம் "அன்பு" அடைக்கும் தாழ் இல்லாத இந்த சக்திக்குத்தான் எத்தனை மகத்துவம், எத்தனை மேன்மை, எத்தனை மதிப்பு, எத்தனை பரிணாமம்.

ஆம் அன்பு ஒரு வற்றாத சக்திவாய்ந்த ஜீவநதி. அந்த ஜீவநதியில் ஓடும் அன்பு நீரை எவ்வளவு தான் அள்ளிப் பருகினாலும் குறையாது. தவிர ஊறிக் கொண்டுதான் இருக்கும் என்பது வலியுறுத்தப்பட்டது.

அதில் தோன்றும் சத்தியம், தர்மம், சாந்தி, அஹிம்சை ஆகிய அனைத்தும் நமது வாழ்வின் ஒப்பற்ற வரப்பிரசாதங்கள் ஆகும். இதைத்தெரிந்திருந்தும் கண்காணமல் இருப்பது ......

"வீழ்வது வெட்கமல்ல
வீழ்ந்து கிடப்பதே வெட்கமானது"

என்ற சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கை எனக்கு ஞாபகப்படுத்துகின்றது.

எனவே வீழ்ந்து கிடந்த எம்மை எழுப்பி விட்டீர்கள். சாயி பாபா தந்த மனித மேம்பாட்டுக் கல்வி மூலம் நீங்கள் காட்டிய பாதையில் மிகமிக கவனமாக நடந்து செல்வோம்.

எல்லோரும் சமம், எல்லா மதமும் ஒன்றே, இறைவன் மழையைப் பெய்யச் செய்தால் பணக்காரன் வீட்டு ரோஜா செடியோடு ஏழையின் வீட்டுக்கீரையும் தான் வளர்கிறது. எனவே வேற்றுமையின்றி நல்வழி நடந்து காட்டுவோம்.

வாழ்க்கை என்பது ஒரு முறை, அவ் வாழ்க்கையை முடிந்தளவு அழகாக வாழவேண்டும். முடியாவிட்டால் அசிங்கப்படுத்தாமலாவது இருக்க வழி காட்டினீர்கள். அன்பு , சத்தியம், தர்மம், சாந்தி, அஹிம்சை என்பது எமது மனதில் ரோஜா மலராக மலர்ந்து மணம் வீசும் போது எமது வாழ்வில் இருந்து வெளிவரும் வார்த்தைகளும் வாசமாகவே இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, இவ்வளவு வழிகாட்டிய சாயி சமித்தி யானது மேன்மேலும் மலர்ந்து மிளிர இறைவனைப் பிராார்த்திக்கின்றேன்.

வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க மனித நேயம்!

"ஜெய் சாயி ராம்"

செ.சுந்தரராணி
ஆசிரியர் க /வ /ஹாத்தனை த.வி
பன்வில.
(அனுப்பியவர் தேசிய கல்வி இணைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# எப்பொழுதும் காக்கும் எம் காவலன்

கடந்த 06.05.2005அன்று வெள்ளிக்கிழமை கிழக்குப் பிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் Dr.பிறேமதாசன் ஐயா அவர்களினால் ஈஸ்வராம்மா தினத்தன்று மூன்று நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. அதற்கு வடபிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் சட்டத்தரணி திரு.வசந்தசேனன் ஐயா அவர்களும் , திரு.புலேந்திரன் ஐயா அவர்களும், திரு.முத்துலிங்கம் ஐயா அவர்களும் ஆண்டவனின் சேவைக்காக சமுகமளித்திருந்தார்கள். இந்த நிகழ்வு கிழக்குப் பிராந்திய இணைப்புக் குழுத் தலைவரினால் கிழக்கிலுள்ள எல்லா சத்திய சாயி நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அன்று தாமரைக்கேணி சமிர்த்தி சார்பில் நாங்களும் மற்றும் ஏனைய சமிர்த்தி உறுப்பினர்களும் எமது வாகனத்தில் பயணம் செய்தோம். காலை 6.30 மணிக்கு புறப்பட்டோம். அன்றைய எல்லா நிகழ்வுகளும் அந்த சாயிராமன் அருளால் மிக விமரிசையாக நடைபெற்றது. கடைசி நிகழ்வின் போது கல்முனை சமிர்த்தியில் இருந்து நாங்கள் வாகனத்தில் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். அப்போது நேரம் 6.30 பிற்பகல். அந்த நேரத்தில் சுவாமி வழி அனுப்பி வைத்தது போல் நிகழ்வின் இடைநடுவில் Dr.பிறேமதாசன் ஐயா அவர்கள் வெளியில் வந்து எங்களை ஆசீர் வதித்து சாயிராம் என்று வழிஅனுப்பி வைத்தார். அத் தருணத்தில் என்னால் எழுதப்பட்ட "சாயி மலர்" என்ற புத்தகத்தைக் கையில் கொடுத்து இதை திரு.வசந்தசேனன் ஐயா அவர்களின் கையில் கொடுக்கும்படி கூறி இனிதே விடைபெற்றுச் சென்றோம்.

வருகின்ற வழியில் இரவு 7.30 மணியளவில் எமக்கு முன்னால் மிக வேகமாக வந்த வாகனம் பிறிதொரு வாகனத்தை முந்திக் கொண்டு எமது வாகனத்துடன் கண்இமைக்கும் நேரத்தில் மோதியது. நேருக்கு நேரான அந்த மோதலில் எங்கள் வாகனத்தில் இருந்தவர்களுக்குச் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பினோம். வாகனம் இரண்டும் முன்பக்கம் மிக மோசமாக நொறுங்கிவிட்டது. அச் சந்தர்ப்பத்தில் எமது வாகனத்தைப் பார்த்து இதில் எத்தனை பேர் இறந்தார்கள் என்று பலர் கேட்டார்கள். இந்நிகழ்வு நடைபெறுகின்ற பொழுது அந்த வாகனத்தில் இருந்த ஒருவருக்கும் எது வந்து எங்கள் முன்னால் மோதியது என்றே தெரிய வில்லை, ஒரு சத்தம் மட்டும்தான் கேட்டது. அதே நேரம் எங்கள் வாகன ஒலி பெருக்கியில் எம் கண்கண்ட தெய் வத்தின் பாடல் ஒலித்த வண்ணம் இருந்தது. இது தான் அந்த சாயீசனின் அருள் என்று அந்நிகழ்வில் பங்குபற்றச் சென்ற எங்களுக்கு சுவாமி நிருபித்துவிட்டார். இதைத்தான் கணப்பொழுதில் எப்பொழுதும் காக்கும் எம் காவலன் அந்த சாயீசன் என்று கூறி நம் இறைவன் நம்மைக் கைவிடவேமாட்டான் என்றும் கூறி இனிதே முடிக்கின்றேன்.

"ஜெய் சாயி ராம்"

இறைசேவையிலுள்ள
ந.ஜெகநாதன்.
தாமரைக்கேணி நிலையம்,
மட்டக்களப்பு.

" கர்ம யோகத்தின் இலக்கு ஞானம்.
ஞானத்திற்கோ கர்மம் இன்றியமையாதது.
இரண்டையும் நடைமுறைப்படுத்துவதே தன்னலமற்ற சேவை.
சேவையே மிகவும் உன்னத சாதனை". - பகவான் பாபா

சத்தியம் சிவம் சுந்தரம். பாக 5, பக். 295.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# பிரித்தானிய மகாராணியார் அந்நாட்டில் இயங்கும் சாயி இளைஞர் பிரிவைக் கௌரவித்துள்ளார்.

இவ்வரிய கௌரவத்திற்கு அத்திவாரம், 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரசாந்தி நிலையத்தை நோக்கி இளைஞர்கள் எடுத்த யாத்திரை மூலம் போடப்பட்டது. 180 இளைஞர்கள் பங்குபற்றினார்கள். அங்கே பிரார்த்தனைப் பாடல், இளைஞர் பிரதிநிதிகளின் உரை, கலந்துரையாடல், சேவைப் பணியும் நிகழ்ந்தன. சேவைப் பணிக்கு "உதவும் கரங்களும் துயரம் தீர்க்கும் இதயங்களும்" எனப் பெயரிட்டு புட்டபர்த்தி சுற்றியுள்ள கிராமங்களில் நாராயணசேவை, மருத்துவ முகாம், சிரமதானம், சிறு குடிநீர்த் திட்டங்கள், மலசலகூடங்கள் அமைத்தல் ஆகிய சேவைகளில் 5 நாட்கள் ஈடுபட்டனர். இதற்காக 5 தொன் நிறையுள்ள பொருட்கள் (45,000 டொலர் பெறுமதியானது) பிரித்தானியாவிலிருந்து கொண்டுசெல்லப்பட்டன. இதற்குரிய பணச்செலவு இளைஞர்கள் "ஆசைக்கு வரம்பு" என்ற கொள்கையைக் கையாண்டு சேமிப்பு மூலம் சேர்த்தார்கள். தீவிர சேவையிலீடுபட்டிருக்கும் பொழுது, ஒவ்வொரு தொண்டனின் பாட்ஜ் (Badge) இலிருந்து விபூதி தென்பட்டது. இலண்டன் திரும்பியதும் எடின்பறோ கோமான் (Duke of Edinburgh) புட்டபர்த்திக்குச் சென்று சேவை செய்த இளைஞர்களின் சேவையைப் பாராட்டி ஒவ்வொருவக்கும் கௌரவமிக்க "எடின்பறோ கோமானின் நற் சான்றிதழ்" வழங்க விருப்பம் கொண்டுள்ளதாக அறிவித்தார். செம்டெம்பர் 3ஆம் திகதி 2005 ஆம் ஆண்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ் வைபவத்திற்குத் தலைமை தாங்கிய பீட்டர் வெஸ்ற்காத் (Peter Westgarth) ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின் சேவையைப் பாராட்டி இதை ஸ்தாபித்த பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிடமிருந்தும் பல விடயங்கள் படிக்க ஆர்வம் கொண்டுள்ளதாகக் கூறினார். நிறுவனம் ஆற்றும் சேவையைப் பராட்டி 13–07.2006 அன்று அரச மாளிகையான பக்கிங்காம் பலஸ்சில் (Buckingham Palace) நிகழ்ந்த மகாராணியாரின் அரச பூங்கா ஒன்று கூடலுக்கு (The Queens Royal Garden Party) அழைப்பு வழங்கப்பட்டது. இளைஞர் பிரிவு இணைப்பாளராகிய ஷிட்டு சுடாசாமாவும் (Shitu Chudasama) பாரியாரும் வைபவத்தில் பங்கு பற்றியபோது, இணைப்பாளர் பேசும்படியும் கேட்கப்பட்டார். பகவானைச் சிந்தனை யில் கொண்டு ஆற்றிய உரை எல்லோரையும் ஈர்த்தது. இவ் வைபவத்திற்கு பெரிய பிரமுகர்கள், பிறநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள் வெவ்வேறு துறைகளில் பிரபல்யம் அடைந்த பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள் ஆகிய 8000 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவ்வளவு முக்கியமானதும் மிகக் கௌரவமானதுமான ஓர் வைபவம். இவ் வைபவத்தின் போது விசேட சான்றிதழும் அளிக்கப்பட்டது. அதில் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனம் என்பதற்குப் பதிலாக ஸ்ரீ சத்திய சாயி என்றே எழுதப்பட்டிருந்தது. இதுவும் பகவானின் அற்புதமென்றே எடுத்துக் கொள்ளவேண்டும். சான்றிதழில் இருந்த வாக்கியம்

This certificate is presented to Sri Sathya Sai on the occasion of 50th anniversary of the Duke of Edinburgh's Award.

With grateful thanks from the patron... for your invaluable contribution as a partner of the award in helping to provide an enjoyable challenging and rewarding personal development program for young people.

(Ref: Heart 2 Heart : Radiosai.org)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# ஆன்மீகசாதனைகளை பகவான் ஊக்குவிக்கிறார்

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழுவின் ஆன்மீக இணைப்பாளர் கேட்டுக் கொண்டபடி எமது நிலையத்தில் ஆன்மீக சாதனை செய்து வருகிறோம். தினசரி காலையும், மாலையும் பிரார்த்தனை நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிறும் காலை 07.00 மணிமுதல் 08.00 மணிவரை ஆன்மீக சாதனை – முக்கியமாக நாமஜெபம் நடைபெறுகிறது. இவற்றைத் தவிர விசேடமாக யூன் மாதம் 11 ஆம் திகதி 1008 கயத்திரி மந்திர ஜெப சாதனை செய்தோம். காலை 07.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இச்சாதனை நடைபெற்றுள்ளது.

இதற்கு அடுத்த வாரம் யூன் 18ஆம் திகதி ஞாயிறு காலை 07.00 மணிக்கு சாதனை ஆரம்பமாகும் போது புதிதாக ஒரு வயதான அம்மா வந்து சாதனையில் கலந்து கொண்டார். சாதனை முடிந்ததும் நான் அவரிடம் சென்று அவரை உற்சாகப்படுத்தும் விதமாக அவரைப் பற்றி விசாரித்தேன். அவர் கூறினார்; தனது பெயர் திருமதி.நாகம்மா என்றும் இணுவிலில் வசிப்பதாகவும், அம்மன் வாலயாயம் உண்டு என்றும் கூறி, முதல் நாள் இரவு பகவான் தோன்றி "விடிய தாவடி சமித்திக்கு போ என்றும் அங்கு பக்திபூர்வமாக நாமம் சொல்கிறார்கள் எனவும், சென்றவாரம் 1008 காயத்திரி ஜெபம் செய்தார்கள். அங்கு மூன்று ஆண்களும் நான்கு பெண்களும் ஏழு பிள்ளைகளும் நாமம் சொல்வார்கள்" எனவும் கூறினார். நான் விடிந்ததும் காலை 06.30 மணிக்கு புறப்பட்டேன் எனக்கு தாவடி சமித்தியைப் பற்றியோ அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றியோ எதுவும் தெரியாது. சமித்தி எங்கு உள்ளது எனவும் தெரியாது. தாவடியில் வசிக்கும் அறிமுகம் உள்ள ஒருவர் வீட்டுக்குச் சென்று விசாரித்து இங்கு வந்து சேர்ந்ததாகவும் கூறினார். அற்புதம் என்வெனில் அன்றைய ஞாயிறு சாதனையில் மேலே குறிப்பிட்ட தொகையினர் தான் கலந்து கொண்டனர்.

நாம் செய்து வரும் சாதனைகளை பகவான் ஊக்குவிக்கிறார் என்று அறிந்த போது, இன்னும் புதிய உற்சாகம் தோன்றுகிறது. யார்யார் கலந்து கொள்கிறார்கள் எத்தனை பேர் கலந்து கொள்கிறார்கள் என்பதை எல்லாம் கூட பகவான் அறிகிறார் **"எனது அழைப்பு இ லாம யாரும் சாயி சேவையி ஈடுபடமுடியாது"** என்பது எவ்வளவு பெரிய உண்மை. நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்.

"ஜெய் சாயி ராம்"

திருமதி.சத்தியபாமா குகதாசன்,
தலைவி - தாவடி நிலையம்.

" கடலிலிருந்து உற்பத்தியான மழைத்துளிகள் எல்லாம் மீண்டும் கடலைச் சென்றடைவதில்லை. ஓடும் ஆறைச் சேர்ந்த துளிகளே சென்றடைகின்றன.

ஆகவே நாமும் ஓடும் ஆறான சத்திய சாயி சேவா நிறுவனத்தில் ஒன்றினால் கடவுளை அடையலாம்."

– சத்தியம் சிவம் சுந்தரம் பாக. 5, பக். 292.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜ கோவிந்தம்

## திரு.எஸ்.ஞானசேகரம் அவர்களின் மொழி பெயர்ப்பு

**முன் குறிப்பு:** ஆதி சங்கரர் அருளிய 'பஜகோவிந்தம்" ஆழ்ந்த வேதாந்த கருத்துக்களுக்கும் நல்ல இசையில் அமைந்த பாடல்களுக்கும் புகழ்பெற்றது. முப்பத்தி மூன்று பாடல்கள் அடங்கிய பஜகோவிந்தத்தை சமஸ்கிருத மூலத்திலிருந்து பலர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள். அவைகள் கருத்தை விளங்கவைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்கள் பஜகோவிந்தத்தில் இருந்த 16 பாடல்களைத் தெரிவு செய்து பாலவிகாஷ் பிரிவு 111 பிள்ளைகளின் பாடத்திட்டத்தில் புகுத்தி அவற்றைக் கற்கும் படி செய்துள்ளார். இத்துடன் பஜகோவிந்தம் பற்றி ஒரு கோடை அருள் மழையை பொழிந்துள்ளார். யாழ்ப்பாணத் துக்கு சாயி வழிபாட்டைக் கொண்டு வந்த முன்னோடி களுள் அமரர் செ.ஞானசேகரமும் ஒருவர். பகவானின் போதனைகளின் ஆழ்ந்த அறிவு பெற்ற இவர் பாலவிகாஷ் வகுப்புகளின் முன்னோடிக் குருவாக விளங்கி னார்.இவருக்கு உதவியாக திருமதி சி.ரவீந்திரன் அவர்களும் உதவிக்குருவாக இருந்தவர். அக்காலத்தில் பஜகோவிந்தம் பகவத்கீதை சுலோகங்கள் பாலவிகாஷ் குருமாருக்கு கற்பிப்பதில் பெரும் சிரமங்கள் இருந்தன. சமஸ்கிருத மொழியில் இருந்தமையால் கருத்து உச்சரிப்பு தெரியாமல் இருந்தது. இந்த நிலையில் அமரர் செ.ஞானசேகரம் அவர்கள் 1985 ஆம் ஆண்டில் பாலவிகாஷ் குருமார்களுக்கான ஒரு பயிற்சி பட்டறை நடாத்தினார். இதில் பஜகோவிந்தம் பாடலும் கருத்தும் கற்பிக்கப்பட்டது.

பின்பு அமரர் ஞானசேகரம் ஐயா மொழிபெயர்ப்பு முயற்சில் ஈடுபட்டார். 1985 ஒக்டோபர் மாதம் அளவில் இந்த முயற்சி நிறைவுபெற்று, தாவடி சமித்தியில், இதைப்பற்றி ஒரு செயல் முறை விளக்கம் பாலவிகாஷ் குருமாருக்கும் அளிக்கப்பட்டது. இந்த மொழி பெயர்ப்பில் உள்ள விசேடம் என்னவெனில் சமஸ்கிருதப் பாடல் மெட்டில் இதை இசையோடு பாடக்கூடியதாகவும், கருத்தும் சுலபமாக விளங்கக் கூடியாததாகவும் உள்ளது.

ஆசிரியர்.

**01.** கோவிந்தனைத்தேடு கோவிந்தனைத் தேடு
கோவிந்தனைத்தேடு மூடமதியே
அந்திய காலம் வந்த அவ்வேளை
இலக்கண விதிகள் துணைக்கு வராவே
கோவிந்தனைத்தேடு........

**02.** பாலவயசு விளையாட்டில் மாய்ச்சல்
காளை வயசு யுவதியர் மாய்ச்சல்
விருத்த வயசு கவலையின் மாய்ச்சல்
பரப்பிரம்மத்தில் எவர்க்குண்டு மாய்ச்சல்
கோவிந்தனைத்தேடு........

**03.** சஜ்ஜன சங்கத்தில் பற்றுக்கள் நீங்கும்
பற்றுக்கள் நீங்க மோஹம் அகலும்
மோஹம் அகல சாந்தி நிலவும்
சாந்தி நிலவ விடுதலை உறுதியே
கோவிந்தனைத்தேடு........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நான் "நீ" "அவன்" யார்க்கும் விஷ்ணு ஒருவனே
அமைதியின்மையால் சினக்கிறாய் என்னுடன்
சமநோக்குடன் எந்நிலையிலும் வேண்டின்
விஷ்ணுத்வம் நீ விரைவில் அடைவாய் –
கோவிந்தனைத்தேடு........

05. ப்ராணாயாமம் ப்ரத்யாகாரம்
நித்யம் அநித்யம் என்பதின் விசாரம்
ஜபசமேத சமாதி அனுஷ்டானம்
செய் அவதானமாய் போ அவதானமாய்–
கோவிந்தனைத்தேடு........

06. யார் என் மனைவி ? யார் உன் புத்திரன்?
இந்தச் சம்சாரம் அதிக விசித்ரம்
எவருடையவன் நீ? எங்கிருந்து வந்தாய்?
இவற்றின் உண்மையை சிந்தி சோதரா
கோவிந்தனைத்தேடு........

07. இரவும் பகலும் காலையும் மாலையும்
மாரியும் கோடையும் உருண்டு கொண்டோடும்
காலன் உன் ஆயுளை விளையாடிக் கழிக்கும்
இருந்தும் விட்டதோ உன் ஆசைப்புயல்கள்
கோவிந்தனைத்தேடு........

08. யோகானந்தமோ, போகானந்தமோ – (ஒன்று)
சேர்ந்த ஆனந்தமோ தனிமையின் இன்பமோ
ப்ரம்மானந்தம் எவருடைய சித்தத்தோ
அவர்க்கே ஆனந்தம், மெய் ஆனந்தம் அவர்க்கே
கோவிந்தனைத்தேடு........

09. பகவத் கீதை சொற்பம் பயின்றவன்
கங்கா ஜலம் ஒரு துளிதான் உண்டவன்
முராரியை ஒரு தரமாகிலும் நினைத்தவன்
அவனுடன் யமனுக்குச் சர்ச்சை இல்லையே
கோவிந்தனைத்தேடு........

10. தாமரை இதழில் நீர்த்துளி நிலையா (து)
இந்த வாழ்வும் என்றும் நிலைக்கா (து)
நோய் அகங்காரம் மூடியதிவ்வுடல்
அறிநீ, லோகம் சோகமயமே
கோவிந்தனைத்தேடு........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. "சத்துரு, மித்திரன், புத்திரன், இனசனம்

நண்பன், பகைவன்—இப் புத்தியை மாற்று

பேதம் காண்பதை எதிலும் விட்டிடு

என்றும் உன் ஆத்மாவை எதிலும் காண்பாய்

கோவிந்தனைத்தேடு........

12. செல்வம் ஓர்கேடு சிந்தித்தறி நீ

கொஞ்சம் சுகமும் இல்லை இது நிசம்

புத்திரராலும் செல்வர்க்குப் பீதியே

எங்கு நோக்கிலும் இதையே காண்பாய்

கோவிந்தனைத்தேடு........

13. மறுபடி ஜனனம், மறுபடி மரணம்

மறுபடி ஜனிக்கத்தாய் வயிற்றில் சயனம்

இந்தச் சம்சாரம் தொலைவது கஷ்டம்

கருணைக்கடலே காத்தருள் வீரே

கோவிந்தனைத்தேடு........

14. காமம், க்ரோதம், லோபம், மோஹம்

இவைகளை அகற்று சிவோஹத்தில் நிலைப்படு

ஆத்ம ஞானம் கிடையாமுடா

நரகத்தில் தள்ளுவார், கட்டி வைப்பார்

கோவிந்தனைத்தேடு........

15. பாடுவது கீதை, ஸஹஸ்ரநாமம்

நினைப்பது என்றும் ஸ்ரீபதி ரூபம்

நிலைப்பது சத்சங்கத்தில் சித்தம்

கொடுப்பது தீன ஜனர்க்குச் செல்வம்

கோவிந்தனைத்தேடு........

16. குருசரணமலர் சேர் பெரும் பக்தா

ஸம்ஸாரத்தில் நின்று வீடு பெறும் முக்தா

இந்திரியம் மனசை இங்கம் அடக்கி (உன்)

இதயத்தில் உறையும் மெய்ப்பொருளை அடைவாய்

கோவிந்தனைத்தேடு........

"ஜெய் சாயி ராம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# பிராந்தியச் செய்திகள்

**கிழக்குப் பிராந்தியம் :**

1. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் செப்ரம்பர் 9ஆம் திகதி முதல் 20ந் திகதி வரை "ஆர்த்தி ருத்திர யாகம்" புட்டபர்த்தியில் நடாத்தினார். இதனையொட்டி கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லா சாயி நிலையங்களிலும் அந்த 11 தினங்களும் மாலை 5.30 மணியிலிருந்து 6 மணிவரை "சாயி காயத்திரி ஜெபம்" செய்யப்பட்டது.

2. திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக வாகரைப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்பில் அகதிகளாக வந்தவர்களுக்கு குழந்தைகளுக்கான பால்மா பெறுவதே மிக முக்கிய பிரச்சினையாக இருந்தது. 24.08.2006 அன்று மட்டக்களப்பு, தாமரைக்கேணி நிலையங்கள் இணைந்து பால்மா எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்கினார்கள்.

3. சுனாமியால் முற்றாக அழிவுற்ற தம்பிலுவில் பஜனை நிலையம், புதிதாக கட்டப்பட்டு 27.08.2006 திறப்பு விழாச் செய்யப்பட்டது. சுனாமிப் பணிகளுக்காக அமெரிக்காவிலிருந்து வந்து சேவையாற்றிய அமெரிக்க வைத்தியர்களினால் இந்த நிதி வழங்கப்பட்டது. சுமார் 21 லட்சம் ரூபாவில் இந்தநிலையம் கட்டி முடிக்கப்பட்டது.

4. 10.09.2006இல் பாலவிகாஷ் தினம் மட்டக்களப்பில் கொண்டாடப்பட்டது. மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள பாலவிகாஷ் சிறுவர்கள் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகள், பேச்சுக்கள், நடனநிகழ்ச்சிகள் நடாத்தி தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

5. 16.09.2006 இல் மட்டக்களப்பு சாயி நிலையம் தனது 41ஆவது ஆண்டு விழாவை வெகு சிறப்பாக கொண்டாடியது.

6. மண்டூர் சாயிநிலையத்தில் நவராத்திரி பூசைகள் சிறப்பாக நடைபெற்று, விஜயதசமியன்று வித்தியாரம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றது. பெருந்தொகையான பிள்ளைகளும், பெற்றோரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

7. விஜயதசமியன்று தாமரைக்கேணி நிலையத்தில் பாதபூசை இடம் பெற்றது. புதியவர்கள் சமூகமளித்து சிறப்பித்தனர்.

8. 06.10.2006 அன்று கோண்டைக் கல்லாறில் புதிய பஜனை நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

9. 08.10.2006 அன்று திருக்கோவில், தம்பிலுவில், விநாயகபுரம் நிலையங்கள் இணைந்து இலட்சார்ச்சனை நிகழ்ச்சியை நடாத்தினர். காலை 7 மணி முதல் பகல் 1 மணிவரை நடைபெற்ற இந்த நிகழ்வில் நிலையங்களின் எல்லா உறுப்பினர்களுடன் பிரதேசசெயலர் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

10. கடந்த பெப்பிரவரிமாதத்தில், அம்பாறை மாவட்ட சேவாதளத் தொண்டர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று திருக்கோவில் நிலையத்தில் நடாத்தப்பட்டது. இதில் சுமார் 300 தொண்டர்கள் பயிற்சி பெற்றனர். திரு. S.சுந்தரலிங்கம் அவர்கள் இப் பயிற்சியை நடாத்தினர்.

**வடமத்திய பிராந்தியம்**

**உறைவிடம் :**

• விதவைகள் இருவருக்கு ஒவ்வொரு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது.

**இடம்பெயர்ந்த மூதூர் மக்களுக்கு உதவி :**

மூதூர் மக்களில் சிலர், திருகோணமலையிலுள்ள, புனித வளனார்பாடசாலையிலும், கலாசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்திலும் தஞ்சம் புகுந்துள்ளார்கள். இவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**சாயி ஊக்குவிப்பு நிதி :**

இந் நிதியிலிருந்து 5 பாடசாலை மாணவர்களுக்கும், 5 பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தலா ஐயாயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டுள்ளது.

**வட பிராந்தியம்**

**அராலியில் கிராமசேவை மூலம் இராம சேவை :**

இக்கிராமத்தில் சில பகுதி மக்கள் மிக பின்தங்கிய நிலையிலுள்ளார்கள். இம் மக்களின் பிரதான தொழில்கள் கடற்றொழில், சீவற்தொழில், கூலிவேலை என்பனவாகும். 650 குடும்பங்கள் இந்நிலையிலுள்ளார்கள். இப்பகுதியிலுள்ள வள்ளியம்மைப் பாடசாலையையும், முத்தமிழ் வாசிகசாலையையும் மையமாக வைத்து எமது சேவைப் பணிகளை ஆற்றி வருகின்றோம்.

முதலாவதாக ஒரு வறிய குடும்பத்தைத் தேர்ந்தெடுத்து வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. பின்பு சிறிய கோவில் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து இப்பகுதிக்குப் போகும் ஒழுங்கை சிரமதான மூலம் திருத்தியமைக்கப்பட்டது. உலர் உணவுப் பொருட்கள் பல தடவைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆன்மிக வளர்ச்சிக்காக பஜனை, நகரசங்கீர்த்தனம், அறநெறி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

வள்ளியம்மைப் பாடசாலைக் கட்டிடத்திற்கு மை பூசப்பட்டது வகுப்புக்களைப் பிரிப்பதற்காக நல் வாக்குகள் எழுதப்பட்ட 12 பலகை அடைப்புகள் (screens) கொடுக்கப்பட்டன. கிராம மக்களுக்கு எம்மில் அன்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. இவ்வன்புத் தொடர் பினால், பாடசாலைக்கு போகும் பிள்ளைகளின் வரவு 60வீதத்திலிருந்து 100 வீதத்தை எட்டியுள்ளது. பிள்ளை களின் தோற்றத்திலும், நடத்தையுலும் முன்னேற்றம் காணப்படுகிறது.

பலர் பிறப்புச் சான்றிதழ்கள், விவாகச் சான்றிதழ்கள் இல்லாமலுள்ளார்கள். சிலருக்கு இச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவிட்டது. மிகுதிப் பேருக்கும் கொடுக்கப்படும்.

சுவாமிப்படம் ஏதேனும் தங்கள் வீட்டில் இல்லையென்று படம் தரும்படி கேட்டார்கள். இதுவரை 250 வீட்டாருக்கு பிறேம் போட்ட சுவாமியின் படம் கொடுத்துள்ளோம். இதை முண்டியடித்து ஆர்வத்துடன் பெற்றார்கள். மிகுதியோருக்கும் படம் கொடுக்கப்படும். மருத்துவ முகாமும் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை மாணவருக்கு இலைக்கஞ்சி, மதிய உணவு கொடுக்கத் தலைமை ஆசிரியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

**இடம் பெயர்ந்த மக்களுக்குதவி :**

12.08.2006 அன்று போர் உக்கிரமடைந்தது முதல் கரையோரப் பகுதி மக்களும், அல்லைப்பிட்டி மக்களும் இடம் பெயர்ந்து யாழ் நகரிலுள்ள பல இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

கதீஜா பாடசாலையிலுள்ள 68 குடும்பத்தைச் சேர்ந்த 260 பேருக்கு, உலர் உணவுப் பொருள், உணவு, விறகு முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் பிரார்த்தனை நிகழ்வுகளும் நடாத்தபடுகின்றன.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தஞ்சமடைந்த 77 குடும்பத்தைச் சேர்ந்த 292 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

நாவலர் மண்டபத்தில் தஞ்சமடைந்தோருக்கு உணவு கொடுக்கப்பட்டது. 30 குடும்பத்தைச் சேர்ந்த 125 பேர் தங்கியிருந்தார்கள். இப்போது இம் முகாம் மூடப்பட்டுள்ளது.

மானிப்பாய் கிராமத்தில் தஞ்சமடைந்த சிலருக்கு உலர் உணவுப் பொருட்களும், உணவும் கொடுக்கப் பட்டன.

வடமராட்சியில் சில பாடசாலைகளில் கரையோர மக்களும், தென்மராட்சி மக்கள் சிலரும் தஞ்சமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு வடமராட்சியிலுள்ள சத்திய சாயி நிலையங்கள் உதவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு சிறு உதவி:**

நாளாந்த உழைப்பாளிகளின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பொம்மைவெளிக்கு அருகாமையிலுள்ள வசந்தபுர மக்களுக்கு உதவி செய்யப்பட்டது. எங்கெங்கே கஷ்டப்படும் குடும்பங்களைச் சந்தித்ததும் சிறு உதவியாகுதல் வழங்கப்படுகிறது.

**யாழ் முஸ்லிம் மக்களுடன் அன்புப் பகிர்வு :**

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியை அண்மித்த பகுதியில் சுமார் 60 குடும்பங்களும் 100 தனியாட்களுமுள்ளார்கள். இவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவர்கள் றம்ழான் பெருநாளன்று (24.10.2006) யாழ் சத்திய சாயி நிலையத்திற்கு வருகை தந்து எம்முடன் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டார்கள். மௌலவி வாகீம் (Faheem) அவர்கள் நோன்பின் மகிமையைப் பற்றி சொற் பொழிவு ஆற்றினார்.

23.07.2006 **அன்று ஊனமுற்றோர்களை** நிலையங்களுக்கு அழைத்து உதவிகள் வழங்கப்பட்டன.

23.09.2006 அன்று இரத்தான நிகழ்வு யாழ் சத்திய சாயி நிலையத்தில் நிகழ்ந்தது. 41 பேர் அன்புத் திரவம் வழங்கினார்கள்.

**இளைஞர் பிரிவின் செயற்பாடுகள் :**

மாதாந்த சாதனை சுழற்சி முறையில் வெவ்வேறு நிலையங்களில் நடாத்தி வருகின்றார்கள்.

**ஜூலை மாதத்தை ஆன்மீக மாதமாக** ஏற்று பாடசாலை மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை உண்டாக்குவதற்காகப்பின்வரும்போட்டிகள் நடாத்தப்பட்டன:

அ) ஓவியப்போட்டி : கொடுக்கப்பட்ட மையக்கரு; ஒன்றே கலம், அறம் செய விரும்பு, செய்யும் தொழிலே தெய்வம் என்பனவாகும்.

ஆ) ஓவிய விமர்சனப் போட்டி : ஐந்து ஓவியங்கள் காட்டப்பட்டு மனதில் எழும் அபிப்பிராயத்தை எழுதச் சொல்லப்பட்டது.

இ) கவிதைப் போட்டி

ஈ) தனி நடிப்பு

உ) சதுரங்கப் போட்டி : இது மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இரு பிரிவாக, வயது 5–16 வரை, 17–35 வரை, ஆண்கள், பெண்கள் வேறாக நடாத்தப்பட்டது.

ஆயிரம் மாணவ மாணவிகள் 42 பாடசாலைகளிலிருந்து பங்குபற்றினார்கள். போட்டியில் முதல் மூன்றிடங்களைப் பெற்றோருக்கு பரிசில்களும், பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**நிறுவனத்தின் தொடர் தேசிய சேவைத் திட்டங்கள்**
(National ongoing Projects)

**1. மனித மேம்பாட்டுக் கல்வி பயிற்சி நிலையம்**

கோப்பாயில் 2001ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் வங்கிக் கணக்கு; சத்திய சாயி சேவா நிறுவனம். A/No 4023, Hatton National Bank, Jaffna, Sri Lanka.

**2. சத்திய சாயி சுவ செவன – Cancer Hospice**

06.07.2002 அன்று ஹன்வெல (Hanwella) என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

**3. சத்திய சாயி பாடசாலை மானிப்பாயில்**

28.10.2002 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. வங்கிக் கணக்கு: A/No 5103701-2, Hatton National Bank, Manipay, Sri Lanka.

**4. சிறுவர் பராமரிப்பு இல்லம்**

வவுனியாவில் 19.01.2003 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. இச்சேவைகளில் பங்கு பற்ற விரும்புவோர், நேரடியாக வங்கிக் கணக்குக்குப் போடலாம். போட்ட பின்பு எமக்கு அறிவிக்க வேண்டும்.

"ஜெய் சாயி ராம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய அனுபவம்

உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்த பொழுது அல்லைப்பிட்டித் தீவி லுள்ள மக்கள் யாழ் நகருக்குள் பிரவேசித்து பள்ளிக் கூடங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். 260 பேர் மட்டில் இடிந்த கதீஜா பாடசாலையில் தஞ்சம் புகுந்தார்கள். இவர்களுக்கு எமது நிறுவனம் உணவுப் பாசல்கள் கொடுப்பது ஒரு சேவையாக இருந்தது.

02.09.2006 ஆம் திகதியன்று கதீஜா முகாமிற்கு மதிய உணவுகளை அனுப்புவதற்காக உணவுப் பாசல்களைத் தயார் செய்யும் சேவாதள தொண்டர்களுக்கு வழங்கும் நோக்கோடு தம் வீட்டிலிருந்து 140 கேக் துண்டுகளை மகளிர் பிரிவு உறுப்பினர் ஒருவர் எடுத்து வந்திருந்தார். தற்செயலாக அவற்றை அம் முகாமிலுள்ள சிறு பிள்ளைகளுக்கு வழங்குவது நல்லது. என்ற சிந்தனை வரவே உடனடியாக முன்னைய தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டு, அவை திசை திருப்பப்படுகின்றன. அதன்படி அவற்றை அம்முகாமிலுள்ள பிள்ளைகளுக்கு வழங்கி மீதியை வயோதிபர்களுக்கு வழங்கும்படி அதனைக் கொண்டுவந்தவரே கூறி அதனை மதிய உணவுகளுடன் அனுப்பி வைத்தார். அதன்படி அது அம்முகாமிலுள்ள அத்தனை சிறுவர்களையும் தேடிப்பிடித்து வழங்கி மீதியை வயோதிபர்களுக்கும் வழங்கி முடிந்து விட்டது. இருப்பினும் இன்னும் சில கேக் துண்டுகள் மீதமாக இருந்ததால் அவை ஏனையோருக்கும் வழங்கப்பட்டது. என்ன ஆச்சரியம் இன்னும் கேக் துண்டுகள் அம் முகாமில் சில வேலைகளை செய்து கொண்டிருந்தவர்களுக்கும் வழங்கப் போதுமானதாக இருந்தது. அம் முகாமிலிருந்தவர்களோ 260 பேருக்கு மேல் ஆனால் கொண்டு சென்றதோ 140 கேக் துண்டுகள் மட்டும் தான்.

**சாயியின் எங்கும் நிறைந்த நிர்மலமான அந்த அருட்கடாட்சத்தினை அப்போது உணரமுடிந்தது.**

இவ்வாறு பஜனைகளின் போது வைக்கப்படும் பிரசாதங்கள் பெருகுவது மேல் நாடுகளில் அநேகமாக நடைபெற்றுள்ளது. ஆனால் இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் இப்படியான சேவையின் போது இதுவே முதல் தடவை என்று குறிப்பிடலாம்.

- சத்திய சாயி சேவா நிலையம், யாழ்ப்பாணம்.

# அன்பின் வேகம் அளப்பரியது

ஒவ்வொரு செயலும் இறைவனின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. பூமி தன்னைத் தானே வினாடிக்கு 18.5 மைல் வீதம் சுற்றுகிறது. சூரியனைச் சுற்றிவர பூமிக்கு ஒரு வருடம் பிடிக்கிறது. ஒளியின் வேகம் நம்பமுடியாத அளவிற்கு வினாடிக்கு ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 284 மைல்கள். இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்துவர ஒரு ஒளிக்கற்றைக்கு எடுக்கும் நேரம் 28 ஆயிரம் கோடி வருடங்கள். விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தின் படி பிரபஞ்சம் முழுவதும் விஷ்ணுவே நிறைந்திருக்கிறார். பிரபஞ்சமேவிஷ்ணுவின் வடிவம் (விஷ்வம் விஷ்ணு ஸ்வரூபம்). ஆகவே மனிதன் ஒளியின் வேகத்திலும் சென்றாலும் மகாவிஷ்ணுவைச் சுற்றிவர 28ஆயிரம் கோடி வருடங்கள் செல்லும். இத்தனை நீண்ட வருடங்கள் மனிதனால் உயிர்வாழ முடியுமா? கலியுகத்தின் தீய விளைவுகளால் மனிதனால் 100 வருடங்கள் கூட வாழ முடியவில்லை. **ஆனால் பிரபஞ்ச வடிவமான இறைவனை ஒரு வினாடியில் சுற்றிவிட முடியும்! அன்பு அதனைச் சாதிக்கிறது. அன்பின் வேகம் அத்துணை அதிகம். அந்த வேகத்தில் பிரபஞ்சத்தை ஒரு விநாடியில் சுற்றிவிட முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# சத்திய சாயி பாடசாலை – மானிப்பாய்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களின் சங்கற்பத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மானிப்பாய் பட்டினத்தில் 2002ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி சத்திய சாயி பாடசாலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தரம் ஒன்றிலிருந்து தரம் 4 வரை 95 மாணவர்களுடன் இயங்கி வருகின்றத. பாலர் பிரிவில் மூன்று வயதிற்கு மேற்பட்டடோர், நான்கு வயதிற்கு மேற்பட்டோர் என இரு பிரிவுகளாக 37 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். 2007 ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை வகுப்புக்கள் நடைபெறும். வரும் ஆண்டில் தரம் ஒன்றிற்கு 25 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். அதிபர் உட்பட 10 ஆசிரியர்களும் 1 இலிகிதரும் 1 காவலாளியுமாக 12 உத்தியோகத்தர்கள் கடைமையாற்றுகின்றனர்.

**பாடசாலையின் மகுட வாசகம் மனித உன்னதம் (Human Excellence) ஆகும்.**

இவ்வாசகத்திற்கு அமைவாகவே இங்கு கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை ஆகிய 5 மனித மேம்பாடுகள் பாடசாலையின் அத்திவாரக் கற்களாக அமைந்துள்ளன. இம் மனித மேம்பாடுகள் அரசாங்கப் பாடவிதானத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றன. நேரசூசிப்படி மாணவர்களிற்கு வேதம் ஓதுவதற்கான பயிற்சியும் கணனி அறிமுகமும், ஒளித்தியானம் என்பனவும் வகுப்பறையில் அமைதியிருக்கையும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால் மாணவர்களில் இயல்பாகவே உறைந்துள்ள நல்ல பண்புகளை வெளிக்கொணர்வதன் மூலம் "**கல்வியின் நோக்கம் ஒழுக்கம்**" என்ற சுவாமியின் மேற்கோளை நிலை நிறுத்த முடிகின்றது.

கல்விக்காக கட்டணம் எதுவும் அறவிடக் கூடாது என்பது சுவாமியின் வேண்டுகோளாகும். ஆகவேதான் எமது பாடசாலையிலும் இலவசக் கல்வியே வழங்கப்படுகின்றது. வருடத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் இலவசமாக 2 சோடி சீருடை, கற்றல், கற்பித்தல் தொடர்பான உபகரணங்கள், சிற்றுண்டி, பால் எனவும் கொடுக்கப்படுகின்றன. மேற்கூறிய செலவுகளுடன் ஆசிரியர்களுடைய சம்பளம் உட்பட தேவையான நிதி முழுவதும் சாயி அடியார்களாலேயே வழங்கப்படுகின்றது. இவற்றிற்கு அண்ணளவாக மாதம் 1, 25, 000/ வரை செலவிடப்படுகின்றது.


தளபாடம், சீருடை என்பவற்றிற்குரிய நிலையான செலவுகள் (Capital Expenses) வருடாவருடம் வகுப்புக்கள் அதிகரிக்கும்போது அதிகரித்துக்கொண்டே போகின்றது.

அன்பளிப்புகளை வழங்கும் அன்பர்களுக்கு பகவானின் அருளும் ஆசியும் என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"ஜெய் சாயி ராம்"

திரு.N.கந்தசாமி
பாடசாலை நிர்வாகக்குழுத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாயி சக்கரம் (அல்லது யந்திரம்) சாயியினுடைய
சகல தன்மைகளையும் சித்தரிக்கின்றது.

இச்சக்கரம் 11.10.1999இல் பகவானால் ஆசிர்வதிக்கப்பட்டது.

நன்றி 'சாயிதிறீ' – திரு. வி. சுப ராவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org